In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவசுந்தரி

மாலை-6 மலர்-5 செப்டம்பர்- 2013 - ஆவணி தமிழ் தெய்வீகத் திங்கள் இதழ்

கஜமுக கணபதி சரணம்! சரணம்!!
கலைநிறை கணபதி சரணம்! சரணம்!!

விலை
ரூபாய் 10/-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



வாழிய வாழியவே

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற அனந்தமங்கலம் அமைந்துள்ளது. பாடல் பெற்ற தலமான அச்சிறுப்பாக்கத்திற்கு வடமேற்க்கில் அமைந்துள்ள. இவ்வூரில் சிறுகுன்றும் அதன்மீது புராதன சிவாலயமும் உள்ளன. பெரிதும் கிலனாகி இருந்த இந்த ஆலயத்தில் பெரிய அளவில் திருப்பணிகள் செய்யப்பட்டு மகாகும்பாபிஷேக விழா 23.08.2013 அன்று மிக சிறப்பாக நடைபெற்றது.

மலைக்கோயிலான ஆனந்தவல்லி உடனாய அகத்தீசுவரர் ஆலயத்
திருப்பணிகளுக்கும் மகும்பாபிஷேகத்திற்கும் பெரிதும் முன்நின்றவர் சென்னை-33.
மகாலட்சுமி எஸ்டேட் அதிபர்

சிவஸ்ரீ M. அனந்தராமன் அவர்கள் ஆவார்

அவருடன் துணைநின்ற பெரும் சிவப் பணியாற்றியவர்

சிவஸ்ரீ R. ரவிச்சந்திரன் அவர்களாவர்

இத்திருக்கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவின் அங்கமாக திருக்கல்யாணவிழாவுடன், எளியவர்க்கு வேட்டி, சேலைகள் அளித்தும், திருக்கல்யாண தாம்பூலம் அளித்தும் ரிஷபவாகனத்தில் பெருமானை அமர்த்தி மலைவலம் வரச்செய்தும் பெருவிழா நடத்தி மக்கள் கண்ணாரக்கண்டு மகிழும் படிக் செய்தவர்கள்.

சிவத்திரு. M.K. நாகப்பன்-ஜெயந்தி நாகப்பன் தம்பதியராவர்

இவர்கள் யாவருக்கும் ஆனந்த வல்லி உடனாய அகத்தீசுவரப் பெருமான் சகல செல்வயோக மிக்கப் பெருவாழ்வை அளித்து இன்பமுடன் வாழ்விக்க வேண்டுமென்ப பணிந்து வேண்டுகிறேன்.

வாழ்க வளமுடன்

என்றும் நாதனைப் போற்றும் **திருக்கயிலை து. சத்தியமூர்த்தி**
தெற்கு ரயில்வே, சென்னை-600 003.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.



சிவசுந்தரி

மாலை-6 ✿ செப்டம்பர் -2013 -ஆவணி ✿ மலர் -5

திருச்சிற்றம்பலம் -

பஞ்சமந்திரம் ஓதும் பரமனார்
அஞ்ச ஆனை உரித்து அனல் ஆடுவார்
நெஞ்சம் வாழி நினைந்திரும் மீயச்சூர்
எந்தமை உடையார் இளங்கோயிலே

- திருநாவுக்கரசர்

பஞ்ச மந்திரமாகிய நமசிவாய என்னும் மந்திரத்தை ஓதிக் கொண்டு இருப்பவனாகிய சிவபெருமான் ஆனையை உரித்தவன். கையில் அனல் ஏந்தி ஆடும் அழகன். அவன் மீயச்சூர் இளங் கோயிலில் விற்றிருக்கின்றான். அந்தக் கோயிலை நெஞ்சில் நிலை நிறுத்தி வாழ்வோம் என்கிறார் நாவுக்கரசர்.

ஆறாம் ஆண்டில் நடைபோடும் சிவசுந்தரியின் இந்த ஐந்தாம் இதழைப் பஞ்சமந்திரம் ஓதும் பரமனை வணங்கிப் போற்றித் தொடங்குவோம். இதில் ஓங்காரத்துட் உட்பொருளாக விளங்கும் விநாயகப் பெருமானை மண்ணால் செய்து வழிபடும் வழிபாடு, கொற்றவைக் கல், பிலம் எனப்படும் சுரங்கவழி, குடமுழுக்கு விழா காணும் திருக்கழுக்குன்றம், திருவீழிமிழலை, நல்லூர் முதலிய ஆலயங்கள் பற்றிய சில செய்திகள், கனவில் கண்ட காதலனை மண முடிக்க வேண்டும் நல்லூர்ப் பெண், வட்டப்பாறை வழங்கிய நீதி முதலான செய்திகளை அறிந்து மகிழலாம்.

இந்த இனிய வேளையில், கஜமுகனைப் பயந்த கௌரியான கற்பகவல்லியும், கருணைவள்ளல் கபாலி நாதனும் அன்பர்களுக்குச் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை நல்கி, இன்பமுடன் வாழ்விக்க வேண்டுமென்று அவர்தம் பொற்பாதங்களில் பணிந்து வேண்கின்றேன்.

வாழி நலம் சூழ,

இனிய அன்புடன்,
பூசை. ச. ஆட்சிலிங்கம்

முகவரி:
ப.எண். 29, பீமண்ண முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18 . அலைபேசி 9941124964

தனி இதழ் ரூ.10/- ✿ ஆண்டுச்சந்தா ரூ. 120/-

email : sivasundhari@gmail.com

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பஞ்சாட்சர விநாயகர்

சைவ சமயத்துள் மிக உயர்ந்ததாகவும், புனிதம் நிறைந்ததாகவும் போற்றப்படுவது ஐந்தெழுத்து மந்திரமான *நமசிவாய* என்பதாகும். இதனைச் சிவாயநம என்று மாற்றியும் பற்பல விதங்களில் 120 வகைகளில் பிரித்துச் சேர்த்தும் ஓதுகின்றனர். ஜெபங்களில் உயர்ந்ததாகப் பஞ்சாட்சர ஜெபம் இருக்கிறது. தேவார மூவரும் நமச்சிவாய மந்திரத்தைப் போற்றிப் பதிகங்கள் பாடியுள்ளனர். திருஞானசம்பந்தர் அஞ்செழுத்துப் பதிகத்தில் அம்மந்திரம் செய்த அருஞ் செயல்களைக் கூறியுள்ளார். சிவனடியார்கள் நடராசரின் திருமேனி ஐந்தெழுத்தால் ஆனதாகக் கூறுவர். சித்தாந்த சாத்திரங்களிலும் இது விளக்கப் பட்டுள்ளது.

விநாயக பக்தர்களும் விநாயகரைப் பஞ்சாட்சர வடிவினர் என்றும், ஓங்காரத்துடன் இணைந்த பஞ்சாட்சர வடிவினர் என்றும் கூறுகின்றனர். அவரது திருமுகம் ஓங்காரத்தையும், திருமேனி ஐந்தெழுத்தையும் குறிக்கிறதென்பர். அவர் உடைந்த கொம்பு ஏந்திய கரத்தால் படைப்புத் தொழிலையும், மோதகம் ஏந்திய கையால் காத்தல் தொழிலையும், பாசத்தால் மறைத்தல் தொழிலையும், திருவடி களால் அருளல் தொழிலையும் ஆக ஐந்தொழி லையும் ஆற்றுகின்றார். கணபதி பூஜா காலங்களில் திரயாட்சர கணபதி பஞ்சாட்சர கணபதி எனப்படும் வடிவங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான எடுத்தாணி வயல் என்னும் ஊரில் பஞ்சாட்சர கணபதி ஆலயம் அமைந்துள்ளது.

அட்டையில்- மண்ணால் செய்த பிள்ளையார், இந்த ஒரு அடி உயரமுள்ள பிள்ளையாரை கர்நாடகத்தைச்சேர்ந்த இந்திரகுமார் என்னும் இளைஞர் இரண்டு மணி நேரத்திற்குள்ளாகவே செய்து அசத்தியுள்ளார். -படமும் தகவலும் உதவி - சத்தீஷ் என்கிற பாலச் சந்திர சிவாச்சாரியார், கோடம்பாக்கம், சென்னை

இந்த இதழில் ....

மண் பிள்ளையார்	...3
துர்க்கைக் கல்	...5
ஆழ்வார்கள் காட்டும் சிவ வடிவங்கள்	...7
கணேசலிங்கம்	...13
கணேசர் தோன்றும் லிங்கம்	...13
ஆயில்யம்	...15
பிலம் புகுதல்	...15
சீறிக் கொத்துமோ வட்டப்பாறை பாம்பு?	...16
பாண்டவர்கள் பூசித்த பஞ்சலிங்கங்கள்	18
ஸ்ரீ கஜகௌரி பூஜை	...20
தஞ்சாவூர் திருத்தல வரலாறு	...21
பச்சையம்மன்	...22
குடமுழுக்கு விழா நல்லூர் பஞ்சவர்ணேசம்	...23
கனவிடை கண்ட காதலனை	...25
கதலி வனத்துக் கழுக்குன்றம்	...27
காசு நல்கும் வீழிமிழலை	...29
வெள்ளெருக்கு விநாயகர்	...31

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மண் பிள்ளையார்

ஓங்காரத்தின் உட்பொருளாக அறிவுக்கு அப்பாலாய் ஞானக்கனியாக, இருக்கும் பிள்ளையார் எளிவந்த வான் கருணை உடையவராகவும் விளங்குகிறார். பக்தர்கள் எந்தப் பொருளாகத் தம்மை எண்ணி வழிபட்டாலும், அப்பொருளில் நிறைந்திருந்து அவர்கள் செய்யும் பூசைகளை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு அருள் பாலிப்பவர்.

பக்தர்கள் மஞ்சள், வெல்லம், மாவு, களிமண் என எது கிடைக்கிறதோ, அதைக் கொண்டு விநாயகரைச் செய்து வழிபடுகின்றனர். அவரும் மகிழ்வுடன் அதில் வீற்றிருந்து அருள்புரிகின்றார்.

மஞ்சள் பிள்ளையாரைப் பூசையின் முடிவில் பெண்கள் எடுத்து வைத்திருந்து குளிக்கும் போது உடலில் தேய்த்துக் கொள்வர். வெல்லப் பிள்ளையாரைப் பூசையின் நிறைவில் பாயசத்தில் விட்டு விடுவர்.

தங்க வெள்ளிப் பிள்ளையார் வைத்திருந்தாலும், விநாயக சதுர்த்தியன்று புற்று மண் கொண்டே விநாயகரைச் செய்து வழிபடுகின்றனர். புற்றுமண் தூய்மையானதாக இருப்பது மட்டுமின்றி, மருத்துவ குணமும் கொண்டதாகும். புற்றுமண்ணை எடுத்து வந்து இளநீர் விட்டுப் பிசைந்து விநாயகர் திருவுருவைச் சமைத்து வழிபடுகின்றனர்.

புற்றுமண் கிடைக்காத போது களிமண், செம்மண் கொண்டும் விநாயகர் உருவைச் செய்கின்றனர். களிமண்ணால் விநாயகரைச் செய்து வழிபடும் வழக்கமே அதிகமாக உள்ளது.களிமண்ணைக் கொண்டு அன்பர் கள் தமது கைவண்ணம் வெளிப் படச் செய்யப் படும் பிள்ளையார் கைப்பிள்ளையார் எனப்படுகிறார். மண்ணை அச்சுக்களில் இட்டுச் செய்யப்படும் பிள்ளையாருக்கு அச்சுப் பிள்ளையார் என்பது பெயர்.

விநாயக சதுர்த்தியன்று இவ்வகைப் பிள்ளையார்களைச் செய்து விற்பனை செய்கின்றனர். அன்பர்கள் இவற்றை வாங்கி அலங்கரித்து வழிபடுகின்றனர். சிலர் மண் பிள்ளையார்மீது நல்லெண்ணெயைப் பூசு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றனர். இவர் எண்ணெய்ப் பிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார்.

புதியதாகக் குழந்தைகளைக் காணும் போது, அவற்றின் தலையில் எண்ணெய் வைக்கும் வழக்கம் இருந்தது. குடமுழுக்கு விழாவிற்கு முன்னாள் இரவில் பிரதிஷ்டிக் கப்படும் சிலைகளுக்கு எண்ணெய் வைக் கும் வழக்கம் உள்ளது. இது தனி விழாவா கவே அமைவதும் உண்டு. இவ்வழக்கத்தை ஒட்டியே எண்ணெய் பிள்ளையார் வழிபாடு நடைபெறுகிறது என்கின்றனர். விநாயகர் சதுர்த்தியன்று விநாயகர் பிறந்து புதிய குழந்தையாக இருப்பதால், அவருக்கு எண் ணெய் வைக்கப்படுகிறது என்கின்றனர்.

அபூர்வமாகச் சில கோயில்களில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள மண் பிள்ளையார் வழிபாடு உள்ளது. இங்கு மூலவரே மண்ணால் ஆனவராக இருக்கின் றார்.

பாண்டிச்சேரியில் அண்ணாசாலையில் மண்ணாலான விநாயகர் கோயில் வீற்றி ருக்கும்ஆலயம் உள்ளது. இது யாழ்ப்பாணத் துச் சித்தரான அக்கா சுவாமிகள் என்பவர் வழிபட்டதாகும். புற்றுமண் குவியலாக விளங்கும்இவருக்கு வெள்ளியால் காது, தும்பிக்கை, கிரீடம் முதலியன அமைத் துள்ளனர். மிகுந்த வரப்பிரசாதியாக இவர் போற்றப்படுகிறார்.

மயிலாடுதுறை மாயூரநாத சுவாமி ஆலயத்தில் ஸ்ரீ விமான கணபதி என்னும் பெயரில் தட்சிணாமூர்த்திக்கு அருகில் விநாயகர் இருக்கிறார். இவரின் திருவுருவம் மண்ணால் ஆன திருமேனி என்கின்றனர். இத்திருமேனியில் குதம்பைச் சித்தர் ஒடுங்கி யிருப்பதாகக் கூறுகின்றனர். இவரைக் குதம்பைச் சித்தராகவே போற்றி வழிபடுகின் றனர்.

மண்பிள்ளையார் வழிபாடு தொன்று தொட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. பூசை நிறைவுற்றதும், மண் பிள்ளையாரை ஏரி, குளம், பெரிய கிணறு போன்ற நீர் நிலைகளில் விட்டுவிடுவர்.

பிள்ளையாரை வரவேற்றும், பிள்ளை யாரை விடை கொடுத்து அடுத்த பூசைக்கு வரவேண்டியும் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புற வழக்கத்தில் உள்ளன.

மண் பிள்ளையார் மீது நெல், பருப்பு முதலிய தானியங்களைக் கொண்டு ஒட்டி அலங்கரிக்கின்றனர். பிள்ளையார் வயிற்றில் தங்கம், வெள்ளி ஆகியவற்றால் செய்த காசு களைப் பதித்து வைக்கின்றனர். மலையில் விளையும் குன்றி மணிகளைக் கொண்டு கண்கள் பதிக்கின்றனர்.

பிள்ளையார் சதுர்த்தி நாளில் தும்பைப் பூ, எருக்கம்பூ, ஆவாரம்பூ முதலான பூக் களைத் தொடுத்து மாலையாக அணிவிக் கின்றனர். அருகம் புல்லை மாலையாகக் கட்டி அணிவித்தும் அருகம்புல்லைக் கொண்டு அர்ச்சித்தும் வழிபடுகின்றனர்.

பிள்ளையார் விரும்பும் உணவுகளாகக் கொழுக்கட்டை, பூரணம் கொண்ட கொழுக் கட்டை, எள் வெல்லம், அவல், அவல் உருண்டை, அதிரசம் முதலியவற்றைப் படைக்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துர்க்கைக் கல்

தமிழர்தம் தனிப்பெரும் பெண்தெய்வம் காளி அவளுக்கு அடுத்தபடியாகக் கொண்டாடப்படுபவள் துர்க்கை. இவளைக் கொற்றவை, ஐயை, வெற்றிச் செல்வி, பாய்கலைப் பாவை எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றனர். வெற்றியைத் தரும் தெய்வமாக இவள்கொண்டாடப்படுகிறாள். பழந்தமிழ் இலக்கியங்கள் கொற்றவையை இளம் பெண்ணாகவும் பஞ்சாயுதங்கள் ஏந்திப் போர்புரியும் வெற்றிக் கடவுளாகவும் அமைத்துள்ளனர்.

வீரம் விளைத்து மாண்ட பெண்களும் துர்க்கையாகவே போற்றப்பட்டனர். அவர்கள் வீர சொர்க்கம் அடைந்த இடங்களில் துர்க்கைக் கற்களை நாட்டியதாகக் கூறுகின்றனர். துர்க்கைக் கற்களைப் பற்றிய சிறிய குறிப்புகளைக் காணலாம்.

வடதமிழ்நாட்டில் கிராமத்தின் ஓரங்களிலும் காட்டுப் பகுதிகளிலும் துர்க்கைக் கல் என்னும் பலகைக் கல் நடப்பட்டு வழிபடப்படுகிறது. இதில் துர்க்கையின் நெடிய உருவம் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

போர்த்தெய்வமான துர்க்கை இதில் எட்டுக் கரங்களுடன் காட்சியளிக்கிறாள். மேற்கரங்களில் சங்கு, சக்கரம் இருக்க, வலது கரத்தில் அபய முத்திரை தாங்கி இடது கரத்தைத் தொடை மீது வைத்துள்ளாள். அந்தக் கரத்தின் மீது கிளி அமர்ந்திருக்கிறது. கரங்களில் காப்பும் கங்கணமும் அணிந்துள்ளாள்.

எஞ்சிய நான்கு கரங்களில் வில், அம்பு, கத்தி, கேடயம், மணி ஆகியன உள்ளன. தலைமுடியை எடுத்துக்கட்டிச் சடாமகுடமாகப் புனைந்துள்ளாள். அதில் பிறைச் சந்திரன் இருக்கிறது. காதுகளில் மகர குண்டலங்கள் அணி செய்கின்றன. மார்பில் கச்சு அணிந்து, முத்துமாலைகளைச் சூடியுள்ளாள். சில வடிவங்களில் நெற்றிக் கண்ணும் அமைக்கப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அன்பர்களுக்குக் கனிவான வேண்டுகோள்

அன்பர்கள் தங்களது சந்தாத் தொகையை அனுப்பி சந்தாவைப் புதுப்பிக்க வேண்டுகிறோம். அத்துடன் தங்களைச் சார்ந்து அன்பர்களுக்கும் சைவ சமய ஆர்வலர்களுக்கும் சிவசுந்தரி இதழை அறிமுகப்படுத்தி சந்தாதாரர் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுகிறோம். தங்களின் நல்லாதரவு எங்களுக்குப் பணியில் உற்சாகத்தைத் தருவதுடன், இதழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதற்கு மகிழ்கிறோம்.

உடையதாக இருக்கின்றன. பாய்ந்து வரும் கலைமான் மீது பவனி வரும் இவளைப் **பாய்கலைப்பாவை** என்று இலக்கியங்களில் குறித்துள்ளனர்.

பெண்கள் சாமரம் வீசுவது போலவும் அல்லது தனியாக சாமரங்கள் மட்டுமாவது அமைக்கப் பட்டுள்ளன. தலைக்கு மேல் குடை நிழல் தருகிறது. திருவடியின் இரு புறமும் இருவர் காட்டப்படுகின்றனர். இவர்களில் ஒருவன் தன் தலையை அரிந்து அம்பிகைக்குச் சிரபாவாடம் என்னும் காணிக்கை அளிக்க முயல்கிறான். மற்றொருவன் தீபாராதனை செய்து வழிபடும் கோலத்தில் இருக்கிறான். சுற்றிலும் நிலை விளக்குகள், பந்து, கழங்கு, பலிப்பொருட்கள் செதுக்கி அமைக்கப் பட்டுள்ளன.

இந்தத் துர்க்கைக் கல்லை மக்கள் சிறப்புடன் வழிபடுகின்றனர். பல்லவர் காலத்திய தொன்மையான துர்க்கைக் கற்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. மேல் மருவத்தூரை அடுத்துள்ள பெரும்பேர் கண்டிகை தான்தோன்றீசுவரர் ஆலயத்திலுள்ள துர்க்கைக் கல் தொன்மையானதும், அளவால் பெரியதுமாகும். இது பல்லவர் காலத்தைச் (ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முற்பட்டது) சேர்ந்தது என்கின்றனர்.

போரில் வெற்றி பெற்றதும், கொற்றவையான துர்க்கையைக் கொண்டாட இத்தகைய சிலைகளைப் புதியதாகச் செய்து வழிபட்டார்கள் என்று கருதுகின்றனர். சிலர் வீரப் பெண்மணிகளுக்கு எடுக்கப்பட்ட நினைவுக் கல்லாக இருக்கலாம் என்று கூறுகின்றனர்.

துர்க்கைக்கல் தமிழரின் தொன்மையான வீரவழிபாட்டை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் நினைவுச் சின்னமாகவும், மக்கள் வழிபடும் தெய்வமாகவும் விளங்கி வருகின்றன.

பெரும்பாலும் துர்க்கைக் கற்கள் கோயில் ஏதுமின்றி வெட்டவெளியிலேயே இருக்கின்றன. அண்மைக் காலமாக சில இடங்களில் இவற்றிற்குக் கோயில் அமைத்துள்ளனர்.

உளுந்தூர்ப்பேட்டையில் உள்ள மாஷாபுரீசுவரர் சிவன் கோயிலுக்கு முன்பாகத் தொன்மையான துர்க்கைக் கல் இருக்கிறது. இதற்கு ஆலயம் எழுப்பியுள்ளனர். நாட்பூசையுடன் சிறப்பு வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

துர்க்கைக் கல் சக்தி பொருந்தியதாகக் கருதப்படுகிறது. பெண்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் துர்க்கைக்கு எலுமிச் சம்பழத்தில் விளக்கேற்றி வழிபடுகின்றனர்.

இவ்வழிபாட்டால் திருமணத் தடைகள் நீங்கிச் சுகமான வாழ்வு உண்டாகும் என்று உறுதியாக நம்புகின்றனர். நன்மக்களைப் பெறவும், சுகமான இல்லறம் அமையவும், வாழ்வில் மனஅமைதியும் வளமும் உண்டாகவும், பலகைக்கல்லில் தோன்றிக் காட்சிதரும் வெற்றிப்பாவையான இந்தத் துர்க்காதேவியைப் போற்றி வழிபடுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புரட்டாசி மாதம் என்பது பெருமாளாம் திருமாலுக்குரிய மாதமாகப் போற்றப்படுகிறது. புரட்டாசி மாதத்தில் திருமால் கோயில்களில் சிறப்பு வழிபாடுகளும், திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன. சிவாலயத்துள் இருக்கும் திருமாலுக்கும் புரட்டாசி சனிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. வீடுகளில் புரட்டாசி சனிக்கிழமைகளில் திருமாலுக்குத் தளிகை இட்டுப் படைக்கின்றனர். திருமாலடியார்கள் கூடி திவ்வியப் பிரபந்தங்களை ஓதி, பஜனை பாடும் பஜனைக் கோயில்களிலும் புரட்டாசிச் சனிக்கிழமை கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

எதிர் வரும் புரட்டாசி மாதத்தில் திருமால் புகழ் பேசும் திவ்யப் பிரபந்த வழியில் ஆழ்வார்கள் மொழியில் சிவபெருமானைச் சிந்தித்து மகிழலாம்.

ஆழ்வார்கள் காட்டும் சிவ வடிவங்கள்

சிவ.திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவனும் மாலும்

சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதிற்சார் சிவமாம் தெய்வத்தின் மேற் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம் பொருளைச் சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகள் எடுத்துக்காட்டுவது போல, கார்முகில் வண்ணனாம் திருமாலை முழு முதற் கடவுளாகக் கொண்டு திருமாலிய நெறியைப் போற்றும் பெற்றியன நாலாயிரத் திவ்ய பிரபந்தப் பாசுரங்களாகும். இவ்வாறு பன்னிரு திருமுறைகளும், திவ்வியப் பிரபந் தப் பாடல்களும், அடிப்படை நோக்கில் இரு திறத்தனவாயினும் அவையிரண்டும் சைவ வைணவச் சமயப் பிணக்கில்லாக் காலத்தில் தோன்றினவாதலின், ஏற்புடைய இடங்களில் பன்னிரு திருமுறையுள் திருமாலையும், திவ்வியப் பிரபந்தத்தில் சிவபெருமானையும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளமையை அவற் றை நுண்ணிதின் கற்போர் உணர்ந்து இன்பு றலாம்.

அரியர்த்தர்(சங்கரநாராயணர்)

மகேஸ்வர வடிவங்களும் பிறவும்

மகேஸ்வர வடிவங்கள் எனப் பெறும் இருபத்து ஐந்து சிவவடிவங்களுள் பன்னி ரண்டு வடிவங்களைத் திவ்வியப் பிரபந்தத் துள் குறிப்பட்டுள்ள ஆழ்வார் பெருமக்கள், சிவபெருமானுடன் தொடர்புடைய சடை, கங்கை, நாகம், கொன்றை, சூலம், மழு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆறுவடிவப் பெயர்களையும் சுட்டியுள்ளமை காணலாம்.

சிவன் அணிந்துள்ளமை

சிவன் செஞ்சடையினையும், சடையில் அணிந்துள்ள கங்கையையும், நாகத்தையும், கொன்றை மாலையினையும் சுட்டியுள்ள ஆழ்வார்கள் சிவன் கரங்களில் ஏந்தியுள்ள சூலத்தையும் மழுவினையும் குறித்துள்ளனர்.

ஜடாதரன்

சிவன் சடையினைச் செஞ்சடை (பெரி. 41-1-5) வார்சடை (பொய். முதல் 74), புன் சடை (மழி திரு. 42), தாழ்சடை (பேய். மூன். 63) என்று குறிப்பட்டுள்ள ஆழ்வார்கள், சிவனைச் சடையான் (நம்.3-1-10), வார் சடைஈசன் (மங்கை.4-2-9), சடைமுடியன் (நம்.4-8 -10) என்றும் பெயரிட்டழைத்துள் ளனர்.

கங்காதரன்

கங்கையைச் சடைமுடியில் அணிந்த சிவன் வடிவைக் கங்கையான் (பெய் - முதல் 74),ஆறுசடைக் கரந்தான்(மழி.நான்.4), வெள்ளநீர்ச்சடையான் (நம்.5-10-4) எனவரும் தொடர்களால் குறித்துள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகாபரணன்

சடைமுடியில் நாகத்தினை அணிந்து தோன்றும் நாகாபரணனான சிவன் வடிவினை ஆடு அரவு ஆர்த்தார்க்கும் என்று திருமழிசையாழ்வாரும் (நான். 91) ஐவாய் அரவாடு சடையோன் என்று திருவெழு கூற்றிருக்கையில் திருமங்கை மன்னனும் குறிப்பிட்டுள்ளனர்.

கொன்றை வேந்தன்

திருமுடியில் கொன்றைமாலை அணிந்த சிவன் வடிவைத் தாதுடைக் கொன்றை மாலை துன்னு செஞ்சடை என்று திருமழிசையாழ்வாரும் (திரு. 9) பனை கொன்றையஞ் செஞ்சடையாய் என்று நம்மாழ்வாரும் (7-6-3) குறிப்பிட்டுள்ளனர். கொன்றை மாலையை மார்பில் சிவன் அணிந்துள்ள தோற்றத்தினை, கொங்கலர்த்தார் வளங் கொன்றை அலங்கல் மார்பினன் என்று திருமங்கையாழ்வார் (நெடுந். 9) குறிப்பிட்டுள்ளார்.

சூலத்தைத் தன் திருக்கரங்களில் ஏந்திய சூலபாணியனான சிவன் வடிவைக் கொன்னவிலும் மூவிலைவேற் கூத்தன் என்று திருமங்கை மன்னன் பெரிய திருமடலில் குறிப்பிட்டுள்ளார். சிவன் கையதுவேல் என்பார் பொய்கையாழ்வார்.

மழுவாளி

தம் கரங்களில் மழு என்னும் ஆயுதத்தை ஏந்திய சிவனை மழுவாளி என்று திருமங்கை மன்னன் (7-9-4) குறித்துள்ளார். நம்மாழ்வாரும் வாள்கொள் நீள் மழு வாளி என்று (9-3-10) குறித்துள்ளார். ஒண்மழுவும் என்பது பேயாழ்வார் தரும் குறிப்பு.

சிவன் மகேஸ்வர வடிவங்கள்

சிவன் ஐந்து முகங்களில் இருந்து தோன்றியனவாகக் கூறப்பெறும் இருபத்தைந்து



சோமாஸ்கந்தர்

சிவ வடிவங்களுள் நடராசர், இட பாரூடர், சந்திரசேகரர், பிட்சாடனர், காமாரி, திரிபுராரி, கஜாரி, வீரபத்திரர், தட்சிணாமூர்த்தி, நீலகண்டர், அர்த்தநாரி, அரியர்த்தர் முதலான பன்னிரு வடிவங்களை ஆழ்வார்கள் தம் பாசுரங்களுள் குறிப்பட்டுள்ளனர்.

ஈசான மூர்த்த வடிவங்கள்

சிவபெருமானுடைய உச்சி நோக்கிய ஈசான முகத்தினின்று தோன்றியதான ஐந்து சிவ வடிவங்களுள் சோமாஸ்கந்தர், கல்யாண சுந்தரர் ஆகிய இருவடிவங்கள் நீங்கலாக, ஏனைய மூன்று வடிவங்களும் ஆழ்வார்களால் குறிப்பிடப் பெற்றுள்ளன.

ஆடல் வல்லான்

நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நடராசப் பெருமானைப் பிணங்கள் சுடுகாடு அதனுள் நடமாடும் (2-6-9) என்று குறிப்பட்டுள்ள திருமங்கையாழ்வார். அத்திரு நடனச்சிறப்பைத் தன் பெரிய திருமடலில்,

ஆயிரந்தோள் மன்னுகர தலங்கள் மட்டித்து
மாதிரங்கள் மின்னி எரிவீச மேலெடுத்த சூழ்கழற்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இடபாருடர்

கால்பொன்னுலகம் ஏழும் கடந்து உம்பர்மேற்
சிலம்ப மன்னு குலவரையும் மாருதமும் தாரகையும்
தன்னுடனே சுழலச் சுழன்று ஆடும்
என்று குறிப்பிட்டுள்ளார்.

இடபாருடர்

சிவனின் இடபாருடர் வடிவைப் பெரியாழ்வார், மங்கை மன்னன், குலசேகரர், மழிசையார், தொண்டரடிப் பொடியார், பூதத்தார், பொய்கையார், நம்மாழ்வார் என வரும் எட்டு ஆழ்வார் பெருமக்கள் பத்தொன்பது பாசுரங்களில் குறித்துப் போற்றியுள்ளனர்.

ஒற்றை விடையானும் (பெரி. 4-10-4)
விடையோன் (குல. 9-4)
போரேறு ஒன்றுடையானும் மங்கை (2-10-8)
ஏற்றான் (பொய். முதல். 74)
ஏறது ஊர்தி (திரு. 72)
ஏறாளும் இறையோனும் (நம். 4-8)
ஏறும் ஏறி (பூத. இரண். 63)

என வரும் தொடர்களால் ஏறுடை எந்தையை ஆழ்வார்கள் எழுவரும் குறிப்பட்டிருக்க, தொண்டரடிப் பொடியாழ்வார் சிவனைப் பதினொரு விடையர் (திருப். 6) என்று சுட்டியிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

பிறைசூடி

பிறைசூடிய பெம்மான் சிவன் தன் சந்திரசேகர வடிவைக் குலசேகரர், மழிசையார், பாணாழ்வார், மங்கை மன்னன், பூதத்தார், நம்மாழ்வார் என வரும் ஆழ்வார் அறுவரும் பதினைந்து பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளனர்.

பிறையேறு சடையானும் (குல. 4-8)
கீறு திங்கள் வைத்தவன் (மழி. திரு. 42)
துண்டவெண் பிறையன் (பாணா. அமல. 6)
பிறைதங்கு சடையான் (மங்கை. 3-4-9)
ஒற்றைப்பிறை இருந்த செஞ்சடையான்
(பூத. இரண். 17)

ஒற்றைப் பிறை அணிந்தான் (நாம. 1-9-10)என வரும் பாசுரத் தொடர்கள் சிவன் அணிந்துள்ள பிறை வடிவைச் சுட்டியிருத்தல் காணலாம். தொடர்ச்சி அடுத்த இதழில்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கணேசலிங்கம்

சிவபூசை ஒன்றே எல்லா செல்வங் களையும் அளிப்பது. உயிர்களைப் பற்றி யுள்ள எல்லாவித குற்றங்களையும் நீக்கிப் புண்ணியம் தருவது. அனைத்துத் தேவர் களும் சிவபூசை செய்தே மேன்மைகளைப் பெற்றுள்ளனர்.

சிவபெருமானின் திருக்குமாரராக இருந்த போதிலும், விநாயகப் பெருமான், தானும் சிவபூசைசெய்து மேன்மை பெற்றுள் ளார். அவர் சிவபூசை செய்து மேன்மை பெற்ற தலங்கள் பலவாகும். அவற்றில் முதன்மை பெற்றது திருவிடை மருதூ ராகும்.

இடைமருதூரான திருவிடை மருதூர்ப் பெருமானைத் தான் சதாகாலமும் பூசை செய்து கொண்டிருப்பதை நினைவூட்டும் வகையில் விநாயகர் தெற்குப் பிராகாரத்தில் வடக்குநோக்கியவாறு அமர்ந்துள்ளார். இத்தலத்தில் பிராகாரத்தை வலம் வந்து விநாயகப் பெருமானை வணங்கிய பின்னரே அவருக்கு எதிரில் அமைந்துள்ள வாயில் வழியாக மூலவரான மருத நாயகரை வணங்கும் வழக்கம் உள்ளது. தலபுராணம் இத்தலத்தில் விநாயகர் வழிபட்டதை மிகச் சிறப்புடன் விவரிக்கிறது.

விநாயகர் பூசித்த மற்றோர் தலம், பிள்ளையார்பட்டியாகும். இத்தலத்தில் விநாயகப் பெருமான் மருதீசர் என்னும் சிவலிங்கப் பெருமானை வழிபடும் கோலத்தில் காட்சியளிக்கின்றார். அவர் தனது கரத்தில் சிவலிங்கம் ஏந்திப் பூசிப்ப வராகவும் இருக்கின்றார்.

கணபதி அசுரனை அழித்த பாவம் தீரப் பூசித்த தலங்களில் ஒன்று திருச்செங்கட் டங்குடியாகும். திருச்செங்காட்டங்குடி யில் உள்ள சிவாலயம் கணபதியின் பெய ரால் கணபதீச்சரம் என்றே அழைக்கப் படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவாரத்துள் இத்தலம் செங்காட்டங் குடியதனுள் கணபதீச்சரம் என்று போற்றப் பட்டுள்ளது.

கஜாமுகாசுரன் என்பவனை இத்தலத் தில் விநாயகர் அழித்தார். அவன் உடலில் இருந்து பெருகிய ரத்தம் இப்பகுதியில் பாய்ந்து இப்பகுதியே சிவப்பாக மாறி விட்டது. அதையொட்டி இது ரத்தாரண்யம் என்றும், செங்காடு என்றும் பெயர் பெற்றது.

இத்தலத்தில் கஜமுகனைக் கொன்ற பாவம் நீங்கச் சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்தார். கணபதி வழிபட்ட தலமாதலின் இத்தலம் கணபதீச்சரம் எனப் படுகிறது.

சிறுத்தொண்டர் அடியவர்க்கு அமுதூட் டும் பணி செய்து சிவனடிக்கீழ்ச் சேர்ந்த திருத்தலமும் இதுவே. அவர் பல்லவ மன்னனுக்காக வாதாபி மீது படையெடுத் துச் சென்று அந்த நகரைத் தீக்கிரை யாக்கினார். அங்கிருந்து கணபதியின் வடிவத்தை எடுத்து வந்து இக்கோயிலில் நிலைப்படுத்தினார். அந்தப் பிள்ளையார் வாதாபி கணபதி என்னும் பெயரில் இத்தலத்தில் வீற்றிருக்கின்றார்.

திருக்கழுக்குன்றமும் விநாயகர் சிவபெருமானைப் பூசித்த தலங்களில் ஒன்றாகும். இங்கு வண்டு என்னும் வகை வாழை மரங்களின் நடுவே வீற்றிருந்து சிவபெருமானைத் தியானித்து அருள் பெற்றுள்ளார். இத்தலத்தில் வடக்கு நோக்கி அமர்ந்து வேதகிரீசரை சதா தியானம் செய்து கொண்டிருப்பவராகக் கூறுகின்றனர்.

திருவையாறு ஐயாறப்பர் ஆலயத்தின் மகா மண்டபத்தில் வடக்கு நோக்கியவாறு விநாயகர் திருவுருவம் அமைந்துள்ளது. இவர் பாலர் எனப்படும் அரசர்களின் கலைப் பாணியில் உருவானவர். ஆனந்தமாக லட்டை எடுத்து அருந்தும் கோலத்தில் உள்ளார். இவருடன் பூதகணங்களும், கந்தவர்களும் உள்ளனர்.

கணபதி பூசித்த தலங்களில் கணபதி யையும் அவர் தொழ வீற்றிருக்கும் பெரு மானையும் பூசித்தால் வெற்றி மேல் வெற்றி பெறலாம். தந்தையும் தனயனும் அன்பர் களுக்கு வரும் அல்லல்களைக் களைந்து இடர்களை விலக்கி, எடுத்த காரியங்களை இனிதே நிறைவேற்றி, அதன்பலனைப் பெற்று மகிழ்வுடன் இருக்க அருள் புரிகின்றனர். ❀

கணேசர் தோன்றும் லிங்கம்

சிவலிங்கத்தின் மேல் நோக்கி நீண்டிருக்கும் உருத்திர பாகத்தில் சிவபெருமானின் உருவத்தை அமைத்து அண்ணாமலையார் என்று போற்றுவதைப் பரவலாகக் காண்கிறோம். சிவலிங்கத்தின் உருத்திர பாகத்தில் சக்தியை அமைத்து சக்தி லிங்கம் என்றும், முருகனை அமைத்து குமர லிங்கம் என்றும், விநாயகரை அமைத்து, கணேசலிங்கம் என்றும் வழிபடுகின்றனர். சக்தி வடிவம் அமைந்த சிவ லிங்கம் காஞ்சிபுரம் மகாகாளேசுவரர் ஆலயத்தில் உள்ளது.

திருவானைக்கா ஆலயத்தின் பிராகாரத்தில் 108 லிங்கங்கள் அமைந்த சன்னதி உள்ளது. இதில் ஒரு லிங்கத்தில் கணேசர் வடிவமும், ஒன்றில் முருகர் வடிவமும் மாடச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள கணேச லிங்கம் அழகானதாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிலம் புகுதல்

பூமிக்கு அடியே தோண்டப்பட்டி ருக்கும் நெடிய சுரங்கவழியே "பிலம்" எனப்படும். இதனைப் பாதாளவழி எனவும் அழைப்பர். மக்கள் தமது பாது காப்பு கருதி ஓரிடத்திலிருந்து பூமியின் கீழே அமைக்கப்பட்ட சுரங்கப்பாதை வழியே தப்பித்து வேறிடம் செல்லும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வரு கின்றது. பெரிய கோட்டைகளில் வாழ்ந்த வர்கள் எதிரிகளின் தாக்குதலைத் தாங்க முடியாத போது, தப்பித்து வெளியே செல்லவும்பாதுகாத்துக் கொள்ளவும் இத்தகைய சுரங்க வழிகளை முன்னேற் பாடாகச் செய்து வைத்துக் கொள்வது வழக்கம். இதன் தொடக்கமும் வெளி யேறிச் செல்லும் வெளிவாயிலும் ரகசிய மாகப் பாதுகாக்கப்படும். அவற்றை எவ ரும் எளிதில் அறிந்து கொள்ள முடியாது.

மகாபாரதத்தில் பாண்டவர்கள் சுரங்கப் பாதை வழியே தப்பித்துச் சென்ற வரலாறு காணப்படுகிறது.

பொறாமை கொண்ட கௌரவர்கள் பாண்டவர்களைக் கொல்ல விரும்பினர். அதற்காகச் சதி திட்டம் தீட்டினர். எளிதில் தீப்பற்றக்கூடிய அரக்கு, சணல் முதலிய பொருட்களைக் கொண்டு பெரிய மாளிகை யைக் கட்டினர். அதில் பாண்டவர்களைத் தங்க வைத்து எரித்துக் கொல்லத் திட்ட மிட்டுச் சூழ்ச்சி செய்தனர். அதன்படியே அரக்கு மாளிகையில் பாண்டவர்களைத் தங்க வைத்தனர்.

விதுரன் மூலமாக விஷயத்தை அறிந்த பீமன், பாதாளத்தைக் குடைந்து இரகசிய மான பாதையை அமைத்தான். அரக்கு மாளிகைக்குத் தானே தீயிட்டுக் கொளுத் தினான். தான் தோண்டி வைத்திருந்த பாதை வழியாகப் பாண்டவர்களும் குந்திதேவி யும் தப்பித்து வாரணாவதம் என்னும் நகரைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேர்ந்து வாழ்ந்திருந்ததாக மகா பாரதம் கூறுகின்றது.

பெரிய கோயில்கள் பலவற்றில் பாதாள வழிகள் இருந்ததை வரலாறுகளின் மூலம் அறிகிறோம். பாதாளப் பாதை களைப் பெரிய கற்கள் கொண்டு மூடியி ருப்பர். பொதுவாக வட்டமான பாறைக் கற் களைக் கொண்டு மூடுவதால் இவை வட்டப்பாறை என்று அழைக்கப்படு கின்றன.

திருவாமாத்தூர் அபிராமேசுவரர் கோயிலைச் சார்ந்த முத்தாம்பிகை அம்மன் கோயில் அரதைப்பெரும்பாழியில் கரு வறை, சென்னை, ஒற்றியூர் சப்தமாதர் சந்நிதி முதலானவற்றில் பெரிய வட்டப் பாறை இருப்பதைக் காண்கிறோம். இந்தப் பாறைகளின் கீழ்ப் பெரிய பாதாளச் சுரங்கம் இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்நாளில் அரித்துவாரமங்கலம் என்ற ழைக்கப்படும் அரதைப் பெரும்பாழி என்னும் தேவாரத் தலத்தில், புகழ்பெற்ற என்னும் சிவாலயம் உள்ளது. இங்கு கருவறையில் சிவலிங்கத்திற்கு அருகில் வட்டமான கல் பதிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் பாதாளத்தை நோக்கிச் செல்லும் சுரங்கப் பாதை உள்ளதாகக் கூறுகின்றனர். இதன் வழியாகவே திருமால் பன்றி வடிவுடன் சிவபெருமானின் திருவடியைத் தேடிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள இறைவன் பாதாள வரதர் என்று அழைக்கப்படுகிறார். அம்பிகை அலங்காரவல்லி ஆவாள்.

திருஒற்றியூர் ஆலயத்தின் வடக்குப் பிராகாரத்தில் சப்தமாதர் ஆலயம் உள்ளது. இந்தச் சந்நிதியின் முன்பாகப் பெரிய வட்டமான பாறை உள்ளது. இதன்கீழ்ச் சுரங்கம் இருப்பதாகக் கூறுகின்றனர். நாகர்கள் இதன் வழியாக வந்து பெருமானை வழிபட்டதாகக் கூறுகின்றனர். வாசுகி என்னும் பாம்பரசன் இத்தலத்தில் வழி பட்டுப் பெருமானின் திருமேனியில் ஒடுங்கியது இங்கு நினைவுகூரத் தக்க தாகும்.

விழுப்புரத்தை அடுத்துள்ள தலம் திரு ஆமாத்தூர். இத்தலத்தில் சிவபெருமானும் அம்பிகையும் எதிர்எதிராகத் தனித்தனியே கோயில் கொண்டுள்ளனர். சுவாமியின் பெயர் அபிராமேசுவரர், அம்பிகையின் பெயர் முத்தாம்பிகை. இவளது ஆலயத்தின் தென்மேற்கு முனையில் வட்டப்பாறை சந்நிதி என்னும் சிவாலயம் உள்ளது. இங்குள்ள சிவலிங்கத்தின் கீழ்ப் பெரிய வட்டமான பாறை உள்ளது. பாறையின் கீழ் தர்மதேவதை பாம்பு வடிவில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

இந்தப் பாறையைச் சத்தியப்பாறை என்றும் கூறுகின்றனர். முற்காலத்தில் நீதி கேட்டு வரும் மக்கள் எதிராளிகளை இக்கல்லைத் தொட்டுப் பொய் சத்தியம் செய்தால் பாறை வெடித்து அதிலிருந்து கொடிய பாம்பு வெளிப்பட்டு அப்படிச் செய்தவரைக் கொத்திக் கொல்லும் என்பது நம்பிக்கையாகும். (இதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்த நாட்டுப்புறக்கதை இப்பகுதியில் வழக்கில் உள்ளது. அடுத்து வரும் பக்கம்16-ல் அதைக் காண்க)

காஞ்சியில் காமாட்சியம்பிகை முன் பாகவும், ஒரு பிலம் உள்ளது. இதனைப் பிலாகாசம் என்கின்றனர். இது தொட்டி போன்ற அமைப்பில் உள்ளது.

பிலம் என்றும், சுரங்கப்பாதை என்றும், பாதாளம் என்றும் பலவாறு அழைக்கப் படும் நிலவறை வழிகள் பல இடங்களில் காணப்படுகின்றன. இவற்றில் பலவற்றின் வரலாறுகள் தெரியாமல் மர்மமாகவே இருக்கின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயில்யம்

நாம் போற்றும் இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்பதாவதாக இருப்பது ஆயில்யம். இத்தொகுப்பில் நான்கு நட்சத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. இது செவ்வகம் போலும், அம்மிக்கல் போலவும் உள்ளது. குயவனின் சக்கரம் போல இருப்பதாகக் கூறுவர். சில நூல்கள் பாம்பைப் போல் இருப்பதாகத் தெரிவிக்கின்றன. ஆதிசேடன் முதலிய பாம்புகள் ஆயில்ய நட்சத்திரத்தில் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. நாகங்களுக்குச் செய்யப் படும் பூசை நாகபலி எனப்படுகிறது. செவ்வாய்கிழமை யிலாவது ஆயில்ய நட்சத்திரத்திலாவது நாகபூசை செய்ய வேண்டும். நாகபூசை செய்த பண்டங்களைக் கருப்புத் துணியுடன் சந்தனம், மலர்கள் சேர்த்து மாலை வேளை யில் பாம்புப் புற்றில் இட வேண்டும் என்கின்றனர். இது ரேணுகன் என்ற யானைக்கு அட்டதிக் கஜங்கள் கூறியதாகப் பாரதத்திலுள்ள அனுசாசன பர்வம் கூறுகிறது.

வடக்கு விநாயகம்

தெய்வங்களை அவர்கள் நோக்கி அமர்ந்திருக்கும் திசைப் பெயரால் அழைக்கும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆலமரத்தின் கீழ் அமர்ந்து தென்திசை நோக்கி அறங்களைப் போதிக்கும் செல்வனான சிவபெருமானைத் தென்னன் என்று அழைக்கின்றோம்.

வடமொழியில் இது தட்சணாமூர்த்தி என்றழைக்கப்படுகிறது. காளி வடக்கு நோக்கிய வாயிலைக் கொண்ட திருக்கோயிலைக் கொண்டிருப்பதாலும் ஊரின் வடபகுதியில் எழுந்தருளியிருப்பதாலும் வாயில் செல்வி என்று அழைக்கப்படுகின்றாள். சமணர்கள் நேமி நாதரை மேற்றிசை (மேல்திசை) பெருமான் எனப் போற்றுகின்றனர். திருமால் மேற்கு நோக்கி யும் ஊருக்கு மேற்கிலும் எழுந்தருளியிருப்பதால் மேற்றிசைப் பெருமாள் என்று அழைக்கப் படுகிறார்.

விநாயகர் எல்லா திக்குகளையும் நோக்குபவர் அவருக்கெனத் திசை வரையறை ஏதுமில்லை என்றாலும்,சிவபூசை செய்யும் வேளைகளில் அவர் வடக்கு நோக்கி அமர்கின்றார். வடக்கிலுள்ள கயிலைமலையை நோக்கியவாறு எழுந்தருளுவதால் அவருக்கு வடக்கு விநாயகர் என்ப தும் பெயராயிற்று. திருவிடைமருதூர், பிள்ளையார்பட்டி, திருக் கழுக்குன்றம், திருவையாறு முதலிய தலங்களில் முதன்மை விநாயகர் வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். மக்கள் வடக்கு விநாயகம் என்ற பெயரைச் சூட்டிக் கொள்ளுகின்றனர். வடக்கு விநாயகருக்கு உத்தர விநாயகர் என்பதும் பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



சீறிக் கொத்துமோ வட்டப்பாறை பாம்பு?

நீண்ட காலத்திற்கு முன்பாக அண்ணன் தம்பியர் இருவர் திருவாமாத் தூருக்கு அருகிலிருந்த கிராமத்தில் வசித்து வந்தனர். அவர்கள் குடும்பம் செல்வாக்கும் பணமும் நிறைந்த குடும்பமாக இருந்தது.

அண்ணன் வஞ்சகன், தம்பி வெகுளி. அவன் பொருள் தேட வெளியூர் சென்றான். நீண்டகாலமாக ஊர் திரும்பவில்லை. இடைக்காலத்தில் அவர்களது தாயும் தந்தையும் இறந்து போயினர். தம்பி வெகு நாட்களுக்குப் பிறகே ஊருக்குத் திரும்பி னான். தனது தாய் தந்தையர் மாண்டதைக் கேட்டு வருந்தினான்.

அண்ணனிடம் சென்றான். சொத்தில் தனக்குரிய பங்கைத் தருமாறு கேட்டான். வஞ்சகனான அண்ணன் ஒரு நாள் தம்பி திரும்பி வருவான் சொத்துக்களைக் கேட் பான் என்று முன்பே அனுமானித்து வைத்திருந்தான். அதற்கேற்பச் சொத்துக் களை விற்றுக் காசாக்கி வைத்து விட்டான்.

தம்பி வந்து கேட்ட போது தாய் தந்தையார் சொத்து ஏதும் வைத்திருக்க வில்லை. எல்லாம் அவர்கள் காலத்தி லேயே செலவாகி விட்டது. "நான் முயன்று சம்பாதித்த பணமே என்னிடம் உள்ளது என்பதால் உனக்குச் சேர வேண்டியது எதுவுமில்லை" என்று கூறினான்.

தம்பி ஏது செய்வது, யாரைக் கேட்பது என்று தெரியாமல் கலங்கி நின்றான். திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை யல்லவா? ஊரார் அவனுக்கு உதவ வந்தனர். அவர்கள் எல்லோருக்குமே அவனது தாய் தந்தையர் பெரும்பொருளுடன் இருந்தது தெரியும். அண்ணனின் வஞ்சகக் குணமும் தெரியும்.

அவர்கள் தம்பியுடன் சென்று, "மூத்தவனே, உமது தாய்தந்தையர் நிறைய செல்வம் வைத்திருந்ததை அறிவோம். நீயோ இல்லை என்கிறாய். நீ எங்களுடன் வந்து ஆமாத்தூர் வட்டப்பாறையைத் தொட்டு உன்னிடம் பெற்றோர் வைத்த சொத்து ஏதுமில்லை என்று சத்தியம் செய்வாயா? அப்படிச் சத்தியம் செய்தால் நீ சொல்வதை நாங்கள் ஒப்புக் கொள்ளு கிறோம்" என்றனர்.

மூத்தவன் அ:தற்கு ஒப்புக் கொண்டான். ஊர் மக்களும் சகோதரர்களும் கூடி ஆமாத்தூரை அடைந்தனர். சகோதரர்கள் வட்டப்பாறை அருகில் சென்றனர். அப்போது மூத்தவன் தனது கைத்தடியைத் தம்பியிடம் கொடுத்து தம்பி இதைக் கொஞ்ச நேரம் வைத்துக் கொள். சத்தியம் செய்துவிட்டு வாங்கிக்கொள்ளுகிறேன் என்றான். தம்பியும் வாங்கிக் கொண்டான்.

அண்ணன் தமது இரண்டு கைகளையும் வட்டப்பாறை மீது ஊன்றிக் கொண்டு" நான் சொல்வதெல்லாம் உண்மை. தாய் தந்தையர் வைத்துவிட்டுச் சென்ற பணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காசு எதுவும் இப்போது என்னிடம் இல்லை. இது சத்தியம், சத்தியம், சத்தியம்" என்றான்.

கிராமமக்கள் திகைத்துவிட்டனர். காலம் சென்ற இவர்களது தாய் தந்தையர் விட்டுச் சென்ற பணம் இவனிடம் தான் உள்ளது என்பதை நாம் நன்கு அறிவோம். என்றாலும் இங்கு ஏதும் நிகழவில்லையே பொய் சத்தியம் செய்தால் பாறை வெடித்துப் பாம்பு சீறி வந்து பொய் சொன்னவைரைக் கொத்திக் கொல்லும் என்பது பொய்யா? இல்லை நாம் தாம் தவறாக இவனிடம் பணம் இருப்பதாக எண்ணி சத்தியம் செய்யச் சொல்ல விட்டோமா? என்று பலவாறு எண்ணினர்.

அண்ணன் வஞ்சகமாகப் புன்னகைத் தான். "தம்பி இப்போது உனது சந்தேகம் தீர்த்து விட்டதா? என்னிடம் பணம் ஏதுமில்லை என்பதை இப்படிச் செய்யச் சொன்னதன் மூலம் உறுதிப்படுத்தி கொண்டாய் அல்லவா" என்று கேட்டுக் கொண்டே அவனிடம் கொடுத்திருந்த கைத் தடி யைப்பெற்றுக் கொண்டான்.

தம்பி திகைத்தான். கலங்கி நின்றான். மக்கள் கலைந்து சென்றிருப்பர். சிலர் மட்டும் அண்ண னைத் தொடர்ந்தனர். ஏறத்தாழ ஐந்து மைல்கள் சென்றனர். அப்போது அண்ணன் அட்டகாசமாகச் சிரித்தான். தன்னைத் தொடர்ந்து வந்த வர்களி டம் "தோழர்களே! நான் சாமர்த்தியமாகப் பொய் சொல்லிச் சத்தியம் செய்து தெய்வத்தையே ஏமாற்றி விட்டேன். பொய் சத்தியம் செய்தால், பாறை யைப் பிளந்து வந்து நாகம் கொத்துமாம், மடையர்கள்" என்றான். அந்தக் கணம் எதிரே இருந்த பாறை வெடித்தது.

அவனுக்குள் அந்த எண்ணம் தோன்றி யதுமே அன்னை முத்தாம்பிகையின் தோட்டில் இருந்த பாம்பு விரைந்து வட்டப் பாறையின் கீழ் இருந்த பிலத்தின் வழியாகப் புகுந்து பாறையின் வெடிப்பின் வழியாக வெளிப்பட்டு, அவனைக் கொத்தித் தீர்த்தது.

பயங்கரமாக அலறிக் கொண்டே அண்ணன் வீழ்ந்து மாண்டான். அவன் கையில இருந்த கைத்தடி முறிந்தது. அதிலிருந்து பொற்காசுகள் வெளிப் பட்டுச் சிதறியோடின.

வஞ்சகன், தாய், தந்தையரின் பணம் நகைகளை விற்றுப் பொற்காசுகளாக்கிக் கைத்தடியில் மறைத்து வைத்து எடுத்து

வந்திருந்தான். சத்தியம் செய்யும் போது அதைத் தம்பியிடம் கொடுத்து என்னிடம்

தொடர்ச்சி26 ஆம் பக்கத்தில்...



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாண்டவர்கள் பூசித்த

பஞ்சலிங்கங்கள்

சிவலிங்கங்களைப் பல்வேறு எண்ணிக் கைகளில் ஒன்றாக வைத்து வழிபடும் வழக்கம் நெடுங்காலமாக உள்ளது. இரட்டை லிங்கம், திரி லிங்கம், சதுர்த்த லிங்கம், பஞ்சலிங்கம், சப்தலிங்கம், அஷ்டலிங்கம், நவலிங்கம், ஏகாதச லிங்கம், சதலிங்கம், சகஸ்ரலிங்கம் என பல்வேறு எண்ணிக்கை களில் சிவலிங்கங்களை ஒரே இடத்தில் அமைத்து வழிபடுகின்றனர். ஒவ்வொரு எண்ணிக்கையில் அமையும் லிங்கங்களுக்காகத் தனித்தனியே தத்துவங் களும், புராண வரலாறுகளும், அவற்றை வழிபட்டுப் பயன்பெற்றவர்கள் பற்றியும் விரிவான செய்திகள் ஆங்காங்கே தல புராணங்களில் விரிவாகக் கூறப்பட் டுள்ளன.

இவ்வரிசையில் உள்ள பஞ்சலிங்க வழிபாடு எனும் ஐந்து லிங்கங்களை ஒன்றாக வைத்து வழிபடும் வழக்கம் தென்னகமெங்கும் பரவலாகவும், சிறப் பாகவும் உள்ளது. பஞ்சலிங்கத் தலங்கள் என்று ஐம்பெரும் தலங்கள் ஆங்காங்கு உள்ளன.

இவ்வைந்து லிங்கங்களும் சிவபெரு மானின் பஞ்சபூதங்களாகத் தோன்றும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் ஆகிய வடிவங் களைக் குறிக்கும் என்பர். பஞ்ச பூதங்களில் நிறைந்து நின்று அவற்றை இயக் கி அதன் மூலம் படைப்புத் தொ ழிலை நடத்தி உலகத் தை வழி நடத்திக் கொண் டிருக்கின் றான். பஞ்சபூத லிங்கங் களை வழிபடுவ தால், உலகம் செழிக்கும். உயிர் கள் மகிழ்ச்சி அடையும் என் கின் றனர்.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஆகமங்கள் சிவபெருமானின் ஐந்து திருமுகங்களில் இருந்து வெளிப்பட்ட பஞ்சப் பிரம்மதேவர்களைக் குறிக்கும் வகையில் பஞ்சலிங்கங்கள் அமைந்துள்ளன என்று கூறுகின்றன்.

ஒரு தலத்திலுள்ள சிவலிங்கத்தை மைய மாக வைத்து அதைச் சுற்றி அமைந்த நான்கு தலங்களில் உள்ள சிவலிங்கங் களோடு சேர்த்து பஞ்சலிங்கமாகப் போற்றி வழிபடும் வழக்கமும் உள்ளது. இவ் வகை யில் பஞ்சபூதத் தலங்கள், பஞ்ச கயிலாயங் கள், பஞ்சகேதாரங்கள், பஞ்ச கோகர்ணம், பஞ்சப் பிரம்மத் தலங்கள் எனப் பலவகை யான ஐந்து லிங்க வழிபாடுகள் உள்ளன. முனிவர்கள், அரசர்கள் முதலியோர் ஐந்து லிங்கங்களை வழிபட்டு மேன்மை அடைந் ததைப் புராணங்கள் குறிக்கின்றன.

இவ்வகையில் முதலில் பாண்டவர்கள் வழிபட்ட ஐந்து லிங்கங்கள் கொண்ட ஐந்து தலங்களை இங்கே சிந்தித்து மகிழலாம்.

சோழ நாட்டிலுள்ள பாடல் பெற்ற திருமுறைத் தலம் பழமண்ணிப் படிக்கரை என்பதாகும். திருஞானசம்பந்தரும் அப்பரடி களும் பாடிய பழம்பதி. பழைய மண் ணியாற்றின் படித்துறையில் அமைந் திருந்த தால், இது பழமண்ணிப் படிக்கரை என்று அழைக்கப்பட்டது. இந்நாளில் இலுப்பைப் பட்டு என்றழைக்கப்படுகிறது. இலுப்பை இதன் தலமரமாகும்.

இங்குள்ள நீலகண்டேசுவரர் ஆலயமே பாண்டவர்கள் பூசித்த பஞ்சலிங்கங்களைக் கொண்ட ஆலயமாகும். நீலகண்டேசர் சந்நிதி உயரமான மேடை மீது அமைக்கப் பட்டுள்ளது. மாடக்கோயில் வகையில் கட்டப்பட்டுள்ளது.

பிராகாரத்தில் பீமன், அர்ச்சுனன், நகுல சகாதேவர்கள் வழிபட்ட லிங்கங்கள் அமைந்த தனித்தனிச் சந்நிதிகள் உள்ளன. இங்கு மேற்குப் பிராகாரத்தில் மாங்கனி விநாயகர் என்னும் பெயரில் விநாயகர் எழுந்தருளியுள்ள சந்நிதி உள்ளது. திரௌபதி நிவேதித்த மாங்கனிகளை ஏற்றுக் கொண்டு அவளுக்கு அருள்புரிந்ததால் இப்பெயர் பெற்றார் என்கின்றனர்.

தென்னாற்காடு கடலூர் மாவட்டத்தில் வேப்பூருக்கு அருகில் நல்லூர் என்னும் தலம் உள்ளது. இது மயூரநதி, கோமுகி, மணிமுத்தாறு ஆகிய ஆறுகள் ஒன்றுசேரும் இடமாகும். இங்கு வில்வவனேசுவரர் என்னும் பெரிய சிவாலயம் உள்ளது. இது முருகன் பூசித்துப் பேறுபெற்ற தலமாகும். இத்தலத்தில் ஐந்து சிவலிங்கங்களுக்கான ஐந்து சந்நிதிகள் உள்ளன. இவை முறையே தருமீசர்,(வில்வவனேசர்) அர்ச்சுனேசுவரர், பீமேசுவரர், நகுலேசுவரர், சகாதேவேசுவரர் என்று அழைக்கப்படு கின்றனர். பீமன் வழிபட்ட லிங்கம் அவன் வடிவத்தைப் போலவே பெரிதாகவும், காத்திரமாகவும் இருக்கிறது. இவ்வூர்த் தலபுராணம் இங்கு பாண்டவர் வழிபட்டதைச் சிறப்புடன் கூறுகின்றது.

காஞ்சிபுரம், காசி முதலான சிறப்பு மிக்க பெரிய தலங்களிலும் பாண்டவர் வழிபட்ட ஆலயங்கள் உள்ளன. காஞ்சி யில் பாண்டவர்கள் வழிபட்ட ஆலயம், பாண் டவேசம் என்னும் பெயரில் உள்ளது. காசி யில் பாண்டவர்கள் பெயரால் அமைந்த ஆலயங்கள் உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடலில் மூழ்கி இருக்கும் பாண்டவ லிங்கங்கள்

குஜராத் மாநிலத்தில் அரபிக் கடலோரத்தில் கோலியாக் என்னுமிடம் உள்ளது. இங்கு கடற்கரையில் இருந்து கடலுக்குள் ஏறத்தாழ 5 கி.மீ. தொலைவில் 70 அடி ஆழத்தில் பஞ்சலிங்கங்கள் உள்ளன. இங்கு தினமும் அதிசயம்ஒன்று நிகழ்கிறது. காலையில் பெருங்கடலாக இப்பகுதி காட்சியளிக்கிறது. பகல் நேரம் ஏறஏற கடல் பின் வாங்கிச் செல்கிறது. நண்பகலுக்கு மேல் 70 அடி ஆழக் கடல் பின்வாங்கிக் கொள்ள பஞ்சலிங்கங்கள் தெரிகின்றன. மக்கள் பஞ்சலிங்கங்களை வழிபடுகின்றனர். இரவு எட்டு மணிக்கு மேல் கடல்நீர் கரையை நோக்கி வருகிறது. அதிகாலைக்குள் நீர் பெருகி மீண்டும் கடலாகிவிடுகிறது. நாள் தோறும் மக்கள் பஞ்சலிங்கங்களை வழிபட கடல் உள்வாங்கிப் பின்னோக்கிச் செல்வ தும் பின்னிரவில் நிறைவதுமாக அதிசயம் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றது.

பாரததேசமெங்கும் ஆங்காங்கு பாண்டவர் வழிபட்ட லிங்கங்கள் சிறப்புடன் இருக் கின்றன. மக்கள் அவற்றை வழிபட்டு மகிழ்கின்றனர். ❀

இனிதே நடைபெற்ற

ஸ்ரீ கஜகௌரி பூஜை

அன்பர்களின் நல்லாதரவுடன் சிவசுந்தரி கலைக்கூடத்தின் ஏற்பாட்டில், ஸ்ரீ கஜகௌரி பூஜை இனிதே நடைபெற்றது. சென்னை மயிலாப்பூர் கிழக்கு மாடவீதியில் அமைந்துள்ள வாணியர் தரும பரிபாலன மண்டபத்தில் 18.08.2013 ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெற்ற இவ்விழாவில் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

மதங்க விநாயகர் பூசை, கௌரி மண்டல ஆராதனை, ஹோமம், மகா நிவேதனம் ஆகியவற்றுடன் விழா சிறப்பாக நடைபெற்றது. பூசைகளை இலங்கை யாழ்ப்பாணம் குருஜி.கே.கே. கோபாலன் சர்மா தலையில், செய்து வைத்தார்கள். சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் திரு.எஸ்.வி.ஜெயராமன் அவர்கள், சென்னை சாய் சமாஜத்தினர் ஆகியோர் நல்லாதரவுடன் அமுதூட்டலும், அன்ன தானமும் நடைபெற்றன. கணபதியை மடியில் வைத்துக் கொண்டு யானை மீதுஅமர்ந்தவாறு காட்சி தரும் கஜகௌரியை மக்கள் பக்திச் சிரத்தையுடன் வழிபட்டனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நூல் அறிமுகம்

தஞ்சாவூர் திருத்தல வரலாறு

சிவத்திரு பொய்கை. வெ. ஆனந்தசுந்தரராஜன் அவர்கள் இந்நூலை அருமையாகத் தொகுத்துள்ளார். இந்நூலுக்கு தவத்திரு.இரத்தினகிரி பால முருகன் அடிமை அவர்கள் சிறப்பான அருளாசி வழங்கியுள்ளார்கள். அவருடைய அருளாசி நூலின் சிறப்பை விளக்குகிறது. அச்செய்தியை அப்படியே இங்கு அளித்துள்ளோம்.

தஞ்சா ஊர் வரலாறு என்பதால் அதற்கு ஏற்றபடி நூல் விரிந்துள்ளது.

தஞ்சாவூர் தொடங்கி திருக்கோவில் பாடல்கள் வரை 22 தலைப்புகளில் அவர் தந்துள்ள தகவல்கள் அரிய கருவூலங்களாக விளங்குகின்றன.

சோற்றுச் செருக்குடைய சோழ வள நாட்டின் உணவு ஊற்றே தஞ்சை, உடல் வளர்ச்சிக்குத் தக்க வளமுடையதோடு மன வளர்ச்சிக்கும் ஏராளமான திருக்கோவில்களையும் கொண்டது தஞ்சாவூர் என்பதை இந்நூல் முதலிலேயே தெளிவாக்குகிறது.

தஞ்சாவூர் என்றால் இராஜராஜ சோழன் தான் முதலில் நினைவுக்கு வருவான். அவனுடைய வரலாறும், அவன் எழுப்பிய திருக்கோவில்கள் வரலாறும், பல வரலாற்றுச்சான்றுகளுடன் அரிதின்முயன்று முறைப்படித் தொகுத்து அளித்துள்ளது வியப்பை உண்டாக்குகிறது.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் கட்டடக் கலை, கோபுரக்கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை போன்ற பல கலைகள் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டுக் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்துள்ளன. அக்கலைகள் யாவும் அருமையாக வளர்க்கப் பட்டுள்ளமை என்பதைப் பல கல்வெட்டுச் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுச் செய்திகளைக் குறிப்பிடும் போது, கல்வெட்டுச் செய்திகள், கல்வெட்டுப் பதிப்புத் தகவல்கள், இராஜராஜ சோழன் கல்வெட்டுகள், பிற்காலக் கல்வெட்டுகள், கல்வெட்டு எண்களோடு அவற்றில் குறிப்பிட்டுள்ள அரசர்களின் பெயர்கள், ஆகியவற்றைத் தெளிவாகக் குறித்துள்ளது அருமை.

மேலும் மெய்கீர்த்திகள், அறக்கொடை ஆணைகள், திருப்பதியம் விண்ணப்பம் செய்தோர் பட்டியல், கருவிகள் இசைத்தோர் என்று பல விவரங்கள்விளக்கமாகக் குறிக்கப் பட்டுள்ளன.

சோழமன்னர்களேயன்றி, பாண்டிய மன்னர்கள் விஜயநகர மன்னர்கள், தஞ்சை நாயக்கர்கள், மராட்டியர்கள் ஆட்சிக் காலத்திலும் தஞ்சை பல துறைகளில் புகழ் ஓங்கியுள்ளது என்பதையும் நூல் தெளிவாக்கி உள்ளது.

இம்மன்னர்கள் காலத்தில் அதாவது இராஜராஜ சோழன் முதல் மராட்டிய காலம் வரை பொறிக்கப் பட்டுள்ள103 கல்வெட்டுகளின் பட்டியலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருமையாகக் கால முறைப்படி தொகுத்துத் தந்துள்ளது பாராட்டத்தக்க அரும்பெரும் முயற்சியாகும்.

அக்காலத்தில் திருக்கோவில்கள் நிர்வகிப்பதற்காக ஊர்களைத் தானம் செய்வது வழக்கமாக இருந்துள்ளது. அவ்வூர்கள் தேவதான ஊர்கள் என்றழைக்கப்பட்டன. அவ்வூர்களிலிருந்து திருக்கோவில்கள் பெறும் வருவாயினால் கோவிலின் நடைமுறைப் பணிகள் முட்டின்றி செவ்வனே நடந்து வந்துள்ளன.

தேவதான ஊர்களின் நாடுகளும், ஊர்களின் பெயர்களும் கல்வெட்டு ஆதாரங்களுடன் அளிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர்த் திருக்கோவில்களில் எழுந்தருளியுள்ள தெய்வங்களைப் பற்றிய பாடல்களும் இணைக்கப்பட்டுள்ளது அருமையாக உள்ளது. கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பா, அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், கொட்டையூர்சிவக்கொழுந்து தேசிகர் அருளிய தஞ்சைப் பெருவுடையார் உலா, பாமாலை, வண்ணச்சரபம் தவத்திரு தண்டபாணி சுவாமிகள் அருளிய தஞ்சைப் பெரிய சிவனார் பதிகம், தஞ்சைக் கணபதி பதிகம், தஞ்சைச் சுப்பிரமணியர் திருப்புகழ் பதிகம் ஆகிய நூல்களிலிருந்து பாடல்களைத் தொகுத்து தந்திருப்பது, பாடி மகிழ்ந்து, வாழ்த்தி வணங்கப் பயன்படும் பாடல்கள் உரையோடு இருப்பது சிறப்பு.

ஆக இந்நூல் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. தஞ்சாவூரின் முழு வரலாறு அழகாகவும், சுருக்கமாகவும், விளக்கமாகவும் வழங்கப்பட்டுள்ளது. ஆன்மிகு அன்பர்களுக்கும் வரலாற்று ஆர்வலர்களுக்கும் சிறந்த அறிவு விருந்தாக இது அமையும் என்று நம்பலாம்.

மேப்லித்தோ தாளில் 144 பக்கங்களும் 72 வண்ணப் பக்கங்களிலும் ஆக 216 பக்கங்களில் தஞ்சாவூரின் சிறப்புகளை அறிய முடிகிறது. நேர்த்தியான பதிப்பாக அது அமைந்துள்ளது. விலை ரூ.250/- மட்டுமே. இது இவரது பதினாறாவது நூலாகும்.

முகவரி ..

பொய்கை, வெ. ஆனந்த சுந்தரராஜன்,
1/15, பிள்ளையார் கோயில் தெரு,
பொய்கை 632114 வேலூர் மாவட்டம்
9932761312 சங்கர்;90254 052005

நூல் அறிமுகம் பச்சையம்மன்

தமிழ்நாட்டின் தனிப் பெரும் நாட்டுப்புறத் தெய்வமாக விளங்குபவள் அன்னை பச்சையம்மன். சிவபெருமானின் உடலில் பாதியைப் பெற வேண்டி, தவம் செய்யப் புறப்பட்ட அன்னை பராசக்தி கொண்ட கோலமே பச்சையம்மன் என்கிறது வரலாறு. பச்சையம்மன் கேதாரம் தொடங்கி, திருவண்ணாமலை வரை பயணித்த வரலாறு. அவளது பரிவாரங்கள் , வழிபாடுகள், முதலியவை இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

விலை ரூ.60/- பக்கங்கள் 80, இந்நூலைப் பெற பூசை.ச.ஆட்சிலிங்கம், சிவசுந்தரி கலைக்கூடம், 29, பீமன்ன முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை-18 அலைபேசி 9941124964

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குடமுழுக்கு விழா

நல்லூர் பஞ்சவர்ணேசம் ...

சோழநாட்டில் பாடல் பெற்ற திருத்தலம் நல்லூர். இங்கு செய்குன்றின் மேல் சிவாலயம் அமைந்துள்ளது. இந்தச் செய்குன்றிற்குக் கல்யாணகிரி என்பது பெயராகும். இந்தக் கட்டுமலை மீது சிவபெருமான் பஞ்சவர்ணேசுவரராக எழுந்தருளியுள்ளார். இவரை அப்பர் சுவாமிகளும், திருஞான சம்பந்தரும் பாடிப் பரவியுள்ளனர். அப்பர் இத்தலத்தை *மலைமல்கு கோயில்* எனக் குறித்துள்ளார்.



கருவறையில் அழகிய சிவலிங்கமாகப் பஞ்சவர்ணேஸ்வரர் எழுந்தருளியுள்ளார். இந்த லிங்கத்தின் பாணப்பகுதி உலோகத்தால் செய்யப்பட்டது போல் பளபளப் பாகவும், வண்டால் துளைக்கப்பட்டது போல் துளைகள் கொண்டதாகவும் உள்ளது. இந்த லிங்கம் நாள்தோறும் ஐந்து வேளைகளுக்கு ஐந்து வண்ணங்களில் காட்சியளிக்கிறது. அதையொட்டியே பெருமான் பஞ்சவர்ணேசுவரர் என்றழைக்கப்படுகின்றார். இந்த லிங்கத்தில் பெரிய பாணத்திற்குத் தென்புறம் சிறிய அளவிலான பாணம் ஒன்றும் உள்ளது. ஆக, ஒரே ஆவுடையாரின் பேரில் சிறியதும் பெரியதுமான இரண்டு லிங்கங்கள் உள்ளன. சிறிய லிங்கத்தை அகத்தியர் என்கின்றனர்.



சிவலிங்கத்திற்குப் பின்னால் உமா மகேசுவரர் வடிவம் பெரிய சுதைவடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. இவரைத் திருமாலும், பிரமனும் வழிபடும் கோலத்தில் உள்ளனர். இத்திருவுருவங்கள் அளவால் பெரியதாகவும் வண்ணம் தீட்டிப் பொலிவுடனும் உள்ளன.

இச்சந்நிதியில் அன்பர்களுக்குப் பெருமானின் திருவடி சூட்டப் படுகிறது. இது இவ்வூர்ப் பெருமான் அப்பர் சுவாமிகளுக்குத் திருவடி சூட்டி அருள்பாலித்ததன் நினைவைப் போற்றும் வகையில் சூட்டப் படுவதாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூறுகின்றனர். நல்லூர் இறைவர் தமக்குத் திருவடி சூட்டி அருள் புரிந்ததைத் திருநாவுக்கரசர் தமது தேவாரத்துள் குறித்துப் போற்றியுள்ளார்.

இத்தலத்தில் காளிதேவிக்கெனத் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது காளிக்குரிய பிரார்த்தனைத் தலமாக இத்தலம் விளங்குகிறது. செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் திரளான மக்கள் இவளை வழிபட்டு அருள் பெறுகின்றனர்.

வடக்கே கயிலாயமலையும், தெற்கே நல்லூரும் பெருமானுக்கு வாழ்விடமாக இருக்கிறதென்கிறார் அப்பர்அடிகள், அதையொட்டி இது தென்கயிலாயம் என்று போற்றப்படுகிறது. இதுவே பூலோக சிவலோகமும் ஆகும்.

தேவலோகத்திற்குச் சென்ற முசுகுந்தன், இந்திரனிடமிருந்து தியாகேசப் பெருமானைப் பெற்றுக்கொண்டு பூமிக்கு வந்தான். தியாகராஜரை அவன் திருவாரூரில் வைப்பதற்கு முன்பாக இங்கே சில காலம் வைத்துப் பூசித்திருந்தான். திருவாரூரில் அவருக்குரிய ஆலயத்தை அமைத்தபின் இங்கிருந்து எடுத்துச் சென்று திருவாரூரில் எழுந்தருளுவித்தான். முசுகுந்தன் பூசித்த முசுகுந்தேசுவரர் என்னும் லிங்கம் இங்கு உள்ளது.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரான அமர்நீதி நாயனார் வாழ்ந்த தலம். அடியவர்களுக்கு ஆடை வழங்கும் பணியைச் செய்து வந்தவர். அவருடைய சிறப்பை வெளிப்படுத்திப் பெருமான் ஆட்கொண்டார். திருநாவுக்கரசர் தமது தேவாரத்துள் பெருமான் வணிகரான அமர்நீதியாரை ஆட் கொண்டு அருள்புரிந்ததைக் குறித்துள்ளார். இத்தலத்தில் ஆனிப்பூரத்தில் அமர்நீதி நாயனார் விழா சிறப்புடன் கொண்டாடப் படுகிறது.

இனிதே நடைபெற்றது.

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமானதும், பல்வேறு வரலாற்றுச் சிறப்புக்களுடன் புராணச் சிறப்புக்களையும் கொண்டதுமான திருநல்லூர், கிரிசுந்தராம் பாள் உடனாய ஸ்ரீ கல்யாண சுந்தரேசுவரர் ஆலயத்தில் இருபத்து நான்காவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ

அம்பலவாண தேசிக சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம் அவரது முன்னிலையில் விஜய வருடம் ஆவணி மாதம் 14ஆம் நாள் (30.08.2013) வெள்ளிக் கிழமை காலை அஷ்டபந்தன கும்பாபிஷேகவிழா இனிதே நடைபெற்றது.

இவ்விழாவில் அலங்காரமான யாகசாலை அமைக்கப்பட்டு, சுவாமி அம்பாள் காளிதேவி ஆகியோருக்கு நவபட்ச யாகசாலைகளும், பரிவாரங்களுக்கு யாககுண்டங்களும் அமைக்கப்பட்டு ஆறு கால வேள்வி பூசைகள் சிறப்புடன் நடைபெற்றன. ஏராளமான அன்பர்கள் கூடிக்களித்தனர். விழாவில் ஆதீனகர்த்தர்அவர்கள் அறிஞர்களுக்குப் பட்டங்கள் வழங்கி கௌரவித்தார்கள். கலை நிகழ்ச்சி களுடன் விழா இனிதே நடைபெற்றது. மாலையில் திருக்கல்யாணத்துடன் இடபவாகனத்தில் பரிவாரங்களுடன் பெருமான் பவனி வந்து அருள்பாலித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கனவிடை கண்ட காதலனை அருள்வாய்

பல ஆண்டுகளுக்கு முன்பாக வந்த ஓர் திரைப்படப் பாடல், மாலைப் பொழுதின் மயக்கத்திலே ஒரு கனவு கண்டேன் தோழி! என்று தொடங்குவது. இதில் ஒரு பெண் மாலை மயக்கத்தின் போது கனவு காண்கிறாள். கனவிடையே காதலன் வருகிறான். அவனோடு பேசி மகிழ்கிறாள். கனவு கலைந்ததும் காதலன் மறைந்து விடுகிறான். அவள் தனது நிலையைப் பாட்டாகப் பாடுகிறாள்.

இது போன்று கனவிடை காதலனைக் கண்டு அவனையே மணாளனாக மண முடித்து வைக்க வேண்டுமென்று கேட்கும் பெண்களை ஆதிகாலம் முதலே காண்கிறோம். புராணங்களில் கனவிடை வந்த காதலனைத் தேடிப் பிடித்து மணம் செய்து கொண்ட மங்கையர் பலர் உள்ளனர். ஆண்டாள் கனவிடையே காதலனைக் கண்டதோடன்றி, முறைப்படியே திருமணம் செய்து கொள்ளுகிறாள். அதைத் தனிப் பாசுரமாகவும் அருளியுள்ளார். தேவாரத்திலும் அத்தகைய பெண்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

கனவு என்பது தூக்கத்தின் போது கிடைக்கும் அனுபவம். அது மகிழ்ச்சி தருவது. துன்பம் அளிப்பது என எப்படியும் இருக்கலாம். கனவுகள் எதிர்காலத்தில் நடக்கப் போவதை முன்கூட்டியே அறிவிக்கும் சாதனமாகவும் இருக்கின்றன.

பெண்கள் இளம்வயதில் கனவு காண் கின்றனர். அவர்கள் கனவுலக இன்பத்தில் திளைக்கின்றனர். சோலைகளில் ஆடிப்பாடுவது, சுனைகளிலும் அருவி களிலும் நீராடுவதுமாக மகிழ்ச்சி பொங்கும் கனவு களில் திளைக்கின்றனர்.

நாம் சொல்லப் போகும் பெண் கனவில் அழகிய வாலிபனைக் கண்டாள். அவனது அழகும் ஆற்றலும் அவளைக் கவர்ந்தன. கனவில் அவனோடு ஆடிப் பாடிக் களித்திருந்தாள். ஒரு நாளில் சில நாளில் பல நாட்கள் அந்தக்கனவு தொடர்ந்து வந்தது. அவளது காதலன் இப்போது மிகவும் நெருக்கமாகி விட்டாள்.

கனவில் கண்ட காதலனை எப்படி அறியமுடியும். நிஜத்தில் சந்திப்பவனின் பேர், ஊர், குலம், கோத்திரம் முதலியவற்றை அறிந்து கொள்ளவே நாள் பிடிக்கும். கனவில் கண்டவனை எப்படிக் கண்டு பிடித்து மணம் பேச முடியும்.

அவள் அதற்கான எளிய வழியைக் கண்டு பிடித்து விட்டான். திருநல்லூர் வந்தாள். "பெருமானே! எனது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கனவிடைத் தோன்றி என்னை மகிழ்வித்த காதலனைக் காட்டி மண முடித்து வை. அவன் அன்னியனாக இருந்தாலும், பொருள் ஏதும் அற்ற வனாக இருந்தாலும் பரவாயில்லை. என் மனம் அவனையே நாடுகிறது. அவனை எனக்களித்து மணம் செய்து வைசு என வேண்டுகிறாள்.

கல்யாணகிரி மீது கல்யாண சுந்தரி யுடன் வீற்றிருக்கும் பெருமான் அவளது எண்ணத்தை நிறைவேற்றி வைத்து விடு கிறான். இவளைப்போல் கனவிடை காதல னோடு மகிழ்ந்த பெண்கள் இதைத் தெரிந்து கொண்டு நல்லூருக்கு வந்து பெருமானைச் சரண் அடைந்து எமக்கும் அருளுக என்று கேட்கின்றனர் என்கிறார் திருஞான சம்பந்தர்.

நல்லூரில் வேதங்களை முறையாகப் பயின்று அதன்படியே ஒழுகும் வேதியர்கள் ஒன்று சேர்ந்து சிவபெருமானைப் போற்று கின்றனர். அவர்களுடன் அன்பர்கள் பல விதமான இசைக் கருவிகளை இசைத்துப் பாடுகின்றனர். இவர்களுக்கு இடையே கன்னியர்கள் தம் கனவிடைத் தோன்றிய காதலனைத் தமக்கு மணம் செய்து வைக்கு மாறு வேண்டுகின்றனர்.

இந்தக் கருத்துக்களை உள்ளடக்கிய திருஞானசம்பந்தரின் பாடல்,

மன்னிய மாமறையோர் மகிழ்ந்து
ஏத்த மருவி எங்கும்
துன்னிய தொண்டர்கள் இன்இசை
பாடித் தொழுது நல்லூர்க்
கன்னியர் தாமும் கனவிடை
உன்னிய காதலரை
அன்னியர், அற்றவர் அங்கணனே
அருள் நல்கு என்பரே

என்பதாகும். இதில் அங்கணனே அருள்வாய் அழகிய கண்களை உடைய சிவபெரு மானே என்கிறாள். இரண்டு கண் கொண்டு தேடுபவர்களை விட மூன்றாவது கண் கொண்ட நீ தேடினால் அவன் உடனே கிடைத்து விடுவான் என்பது குறிப்பாகும்.

கன்னியரே, நீங்கள் விரும்பும் மணாள னைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ நல்லூர்ப் பெருமானை வணங்குங்கள் ❀

......17 ஆம் பக்கத் தொடர்ச்சி

எதுவும் இல்லை என்று சத்தியம் செய்தான். அக்கணம் அவன் சொல்வது உண்மையாக இருந்ததால், ஏதும் நடைபெறவில்லை. தெய்வம் நின்று கொல்லும் அல்லவா? தெய்வத்தை ஏமாற்றிவிட்டோம் என்ற எண்ணம் தோன்றிய கணத்திலேயே வெளிப்பட்டு அவனைக் கொன்று நீதியை நிலைநாட்டி விட்டது. மக்கள் அதைக் கண்டு வியந்தனர். பொற்காசுகளைச் சேகரித்துத் தம்பியிடம் அளித்தனர். அவன் மகிழ்ந்தான்.

பாறை வெடித்துப் பாம்பு வெளிப்பட்ட இடம் இந்நாளில் தும்பூர் என்றழைக்கப் படுகிறது. அங்கு வெளிப்பட்ட நாகத்திற்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. அது நாகாத் தம்மன் கோயில் என்றழைக்கப்படுகிறது. நீதிதேவதை பாம்பு வடிவில் சென்றதைக் குறிக் கும் வகையில் முத்தாம்பிகையின் திருமேனியில் பாம்பின் வால் இருப்பதாகக் கூறு கின் றனர். திருவாமாத்துாரில் அம்மன் சந்நிதியிலுள்ள வட்டப் பாறைமீது இப்போது லிங்கம் அமைக்கப்பட்டுள்ளது ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கதலி வனத்துக் கழுக்குன்றம்

சென்னையை அடுத்துள்ள புகழ்பெற்ற சைவத் திருத்தலம் திருக்கழுக்குன்றம். இங்கு நான்கு வேதங்களும் இங்குள்ள மலையில் நான்கு சிகரங்களாக இருக்கின்றன. கிருத யுகத்தில் ரிக்வேத சிகரத்திலும் திரேதா யுகத்தில் யசூர்வேத சிகரத்திலும் துவா பர யுகத்தில் சாம வேதமான சிகரத்திலும் எழுந் தருளியிருந்த சிவபெருமான் கலியுகத்தில் அதர்வண வேத சிகரத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். ஆதியில் இவர் வாழைக் குருத்து வடிவத்தில் தோன்றி அருள்பாலித்ததாகக் கூறுகின்றனர்.

வேதமயமான சிகரங்களில் வீற்றிருப்பதால் வேதகிரீசர் என்பது பெயராயிற்று. இங்குள்ள வாழை வனத்தில் அம்பிகையும், விநாயகரும் வீற்றிருந்து சிவருமானைக் குறித்து தவம் இருந்து அருள் பெற்றதாகக் கூறப்படுகிறது. வண்டு எனப்படும் வாழை இனத்தினைச் சேர்ந்த மரங்கள் அடர்ந்திருந்ததால் இத்தலம் வண்டு வனம் எனவும், கதலி வனம் எனவும் அழைக்கப்படுகிறது. தல விநாயகர் வண்டு வனப் பிள்ளையார் எனும் பெயரில் வடக்கு நோக்கி அமர்ந்து தலை மேலுள்ளவேதகிரீசரை தியானித்துக் .கொண்டிருக்கின்றார். அம்பிகை திரிபுரசுந்தரி. கதலி வனத்தில் உறைவதால் வம்சத்தை வாழ்விக்கும் கதலீ கௌரியாகவும் போற்றப்படுகிறாள்.

இத்தலத்து முருகனை அருணகிரிநாதர் கதலிவன மேவு பெருமாளே என்று துதித்துள்ளார். தாழக்கோயில் இரண்டாம் பிராகாரத்தில் அருணகிரிநாதர் துதித்த ஆறுமுகப் பெருமான் ஆலயம் உள்ளது.

இத்தலத்தில் சங்குதீர்த்தம் என்னும் பெரிய திருக்குளம் உள்ளது. அதில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு பிறக்கிறது. அப்படிப் பிறந்த சங்குகளை ஆலயத்தில் சேர்த்து வைத்துள்ளனர். மார்க்கண்டேயர் இத்தலத்திற்கு வந்து தியானத்தில் ஆழ்ந்தார். சிவ பூசை செய்யத் தொடடங்கிய போது நீரை முகந்து அபிஷேகம் செய்ய உரிய கலசம் கிடைக்கவில்லை. சிவபெருமான் அப்போது குளத்தில் சங்கை தோன்றச் செய்தார். அதுமுதல் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை இக்குளத்தில் சங்கு பிறப்பதாகக் கூறுகின்றனர்.

சமயக்குரவர் நால்வரும் பாடிப் பரவிய திருத்தலம். அருவநிலை ஜோதி வழிபாட்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy



டில் திளைத்திருந்த மணிவாசப் பெருமானுக்கு இறைவன் தனது கணக்கிலாத திருக் கோலங்களைக் காட்டி அருள் பாலித் தான். அதனை அவர் ஏழு பாடல்களில் பாடியுள்ளார். மணிவாசகர் சந்நிதியுடன் ஆத்மநாதர் ஆலயம் பிராகாரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. திருவாவடுதுறை ஆதீனகர்த்தர்கள் இதனைத் திருப்பணி செய்துள்ளனர்.

இத்தலத்து அம்பிகையின் திருப்பெயர் திரிபுரசுந்தரியாகும். இவளது திருமேனி கல்லால் ஆனதல்ல. அஷ்டகந்தம் எனப் படும் எட்டு வகை மணமூட்டும் பொருட்களால் ஆனது. இவளுக்குப் புனுகுச் சட்டம் சாத்துவதும், வழக்கம். பாதம் வரையிலேயே அபிஷேகம், ஆடிப் பூர நாளில் முழு அபிஷேகம் நடைபெறுகிறது. சிவபெருமான் சுந்தரருக்குப் பொன் அளித்தவர். இதனைக் குறிக்கும் வகையில் இத்தலத்துச் சோமாஸ்கந்தர் வடிவில் வலது கரத்தில் ஒரு பொற் கட்டி வைக்கப்பட்டிருந்தது. இப் போது பொற் கட்டி இருந்த முளை மட்டுமே உள்ளது. இவருக்குப் பொன்னிட்டநாதர் என்பதும் பெயர்.

இத்தலத்தில் யுகத்தின் தொடக்கத்தில் கோடி உருத்திரர்கள் கூடி வழிபட்டனர். சிவபெருமான் கோடி வடிவு கொண்டு அவர்கள் ஒவ்வொருவர் முன்பாகவும் தோன்றிக் காட்சியளித்தார். அதையொட்டி இத்தலம் உருத்திர கோடி என்று அழைக்கப் படுகிறது. உருத்திரர்கள் வழிபட்ட **ருத்ர கோடீசர்** என்னும் சிவாலயம் கோயிலுக்குக் கிழக்கேயுள்ளது.

இத்தலத்திற்குரிய பெயர்களில் முதன்மை பெற்றது திருக்கழுக்குன்றம் ஆகும். இப்பெயர் வரக் காரணம் முனிவரின் சாபம் பெற்ற அஷ்டவசுக்கள் கழுகுகளாகப் பிறந்தனர். யுகத்திற்கு இருவர் வீதம் இங்கு வழிபட்டனர்.கலியுகத்தில் பூஷா, விதாதா எனும் வசுக்கள் கழுகு வடிவம் கொண்டு வழிபட்டு வந்ததாகக் கூறுகின்றனர். பண்டாரம் தரும் சர்க்கரைப் பொங்கலை உண்டு விட்டு, வேதகிரீசர் விமானத்தை வலம் வந்து தங்கிச் சென்றதைப் பதிவு செய்துள்ளனர். தேவாரத்துள் இத்தலம் கழுக்குன்றம் என்றே குறிக்கப்பட்டுள்ளது. வடநாட்டு மக்கள் இத்தலத்தை இப்பக்ஷிகளின் பெயரால் **பட்சிதீர்த்தம்** என்று அழைக்கின்றனர்.

புராண, வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் அயல் நாட்டுப் பயணிகளைக் கவர்வதும் ஆன திருக்கழுக்குன்றம் வேதகிரீசர், திரிபுர சுந்தரி, தாழக்கோயில் பக்தவத்சலம் முதலான சந்நிதிகளில் எதிர்வரும் 15.09.2013 ஞாயிறன்று குடமுழுக்கு சிறப்பாக நடைபெற உள்ளது.

வேதகிரியானைத் தொழுது வளமான வாழ்வைப் பெறுவோம். (இத்தலத்தின் சிறப்புக்களை எமது கழுகுதொழுவேதகிரி எனும் வெளிவர உள்ள நூலில் காணலாம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடமுழுக்கு விழா காணும்

வாசி தீரக் காசு நல்கும் வீழிமிழலை

தேவார மூவரும் பாடிப் பரவிய சோழ நாட்டுத் திருத்தலம் திருவீழிமிழலை.

திருமால், பலகாலமாக அசுரர்களை அழித்து வந்தால் தனது சக்ராயுதம்முனை மழுங்கித் வலிமை இழந்து போனதை உணர்ந்து, புதிய சக்ராயுதத்தைப் பெற விரும் பினார், சிவபெருமானிடம் ஜலந்தரனை அழித்த சக்ராயுதம் இருப்பதை அறிந்தார். சிவபெருமானைப் பூசித்து அதைப் பெறத் திட்டமிட்டார்

அவர் சிவபெருமானைப் பூசிப்பதற்குத் தகுதியான இடத்தைத் தேடியவாறே இத் தலத்திற்கு வந்தார். இங்கிருந்த வீழிச் செடி கள் நிறைந்த வனத்தில் சுயம்பு லிங்கத்தைக் கண்டார்.வானுலகத்திலிருந்து விமா னத் தைக் கொண்டு வந்து அதற்கு அமைத்தார். புதிய தாமரைக் குளத்தை அமைத்து அதிலி ருந்து தினமும் 1000 தாமரை மலர்களைப் பறித்து வந்து சிவபெருமானை ஆராதித்து வந்தார்.அவரது பக்தியைச் சோதிக்க எண் ணிய சிவபெருமான், பூசைவேளையில் ஒரு பூவை மறைத்தார். பூசையின் நிறைவில் மலர் ஒன்று குறைவதைக் கண்ட திருமால், சற்றும் தாமதியாமல் தமது மலர் போன்ற கண் ணைப் பெயர்த்து சிவபெருமானின் பாதத் தில் இட்டார். சிவபெருமான் லிங்கத்திலி ருந்து வெளிபட்டு, திருமாலுக்கு அருள் புரிந் தார். அவருக்கு பிரகாசமான கண்ணை யும், வலிமை பொருந்திய சக்ராயுதத்தையும் அளித்தார்.

திருமால் அமைத்த இங்குள்ள ஸ்ரீவிமா னம் பன்னிரண்டு சிங்கங்களால் தாங்கப்ப டுவது. தேவாரம் இதனை மடங்கல் பூண்ட விமானம் என்றும், விண்ணிழி விமானம் என்றும் போற்றுகின் றது.

சிவபெருமான் சக்கரம் வழங்கும் கோலத்திலும்,திருமால் சக்கரம் பெறும் கோலத்திலும் உலோகத் திருமேனிகள் இக் கோயிலில் உள்ளன. சக்ரதானர் எனப்படும் சிவபெருமானின் திருவடியில் திருமாலின் கண் மேற்புறமும், சக்கரம் பாதச் சுவட்டிலும் உள்ளன.

திருஞானசம்பந்தரும், அப்பர் சுவாமிக ளும் சில காலம் இங்கே தங்கியிருந்தனர். அப்போது பஞ்ச காலம் வந்தது. உணவுப்

ஸ்ரீ கார்த்தியாயினி ஸமேத ஸ்ரீ கல்யாண சுந்தரேஸ்வரர்
திருவீழிமிழலை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருட்கள் கிடைப்பது அரிதானது. இறைவன் இருவருக்கும் பொற்காசுகளை அளித்து, அதனைக் கொண்டு அடியவர்களுக்கு அமுதூட்டும்படிச் செய்தான்.

இத்தலத்தில் தங்கியிருந்தபோது, திருஞானசம்பந்தருக்குச் சீர்காழி சென்று தோணியப்பரைக் காண வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று.பெருமான் விண்ணிழி விமானத்திலேயே தோணியாக விளங்கும் காட்சியைக்காட்டினார்.திருஞானசம்பந்தர் அக்காட்சியைக் கண்டு வியநது, காழியையும் வீழியையும் சேர்த்துப் பாடி மகிழ்ந்தார்.

பெருமிழலைக் குரும்பர் என்னும் பக்தர் இத்தலத்து இறைவனுக்கு விளாம் பழங்களை நிவேதித்து முத்தி பெற்றுள்ளார்.

இத்தலத்திலுள்ள காட்சி கொடுத்த நாயகர் மாப்பிள்ளை சுவாமி என்று அழைக்கப்படுகின்றார்.கார்த்தியாயன முனிவரின் திரு மகளாகப் பிறந்த பார்வதி தேவியைத் தேடி வந்து மணம் புரிந்து கொண்ட அக்கோலத் திலேயே காட்சியளித்துக் கொண் டிருக்கிறார். கருவறையில் எழுந்தருளி யிருக்கும்

மூலவரான மகாலிங்க மூர்த்திக்கு வீழிநாதர் என்பது பெயர்.சுவேதகேது என்பவனைக் காக்கச் சிவபெருமான் இங்கு காலனை அழித்தார். சுவேதகேது இவரைத் தழுவிக் கொண்ட போது அவன் அணிந்திருந்த உருத்திராக்கம் இவர் மேனியில் பதிந்து வடுவை ஏற்படுத்தியுள்ளது.

இத்தலத்தில் உள்ள கால சம்ஹார மூர்த்தி வடிவம் அழகியதாகும்

மகாலிங்க வீழிநாதருக்குப் பின்புறம் பெரிய வடிவங்களாகச் சிவனும் உமையும் நின்று கொண்டிருக்கின்றனர். இம்மூர்த் திக்கு அழகிய மணவாளன் என்பது பெயர். தேவாரத்துள் இது நித்த மணவாளன் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

திருமாலுக்குப் பலம் பொருந்திய சக்ரா யுதம் அளித்தும்,சுவேதகேது மன்னனுக்கு யமபயம் நீக்கி வாழ்நாள் அளித்தும்,கார்த்தியாயனர் பெண்ணை மணந்து மணக் கோலம் காட்டியும்,அப்பருக்கும், ஞானசம்பந் தருக் கும் பொன்னளித்துக் காட்டியும்

பல்லாற்றானும் அருள்புரியும் சிவ பெருமான் எழுந்தருளியுள்ள இத்திருவீழிமிழலை விண்ணிழி விமானத் திருக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான தாகும். இந்நாளில் இருபத்து நான்காவது குரு மகா சந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவமிகளின் ஆணையின்படி இத்திருக்கோயிலில் விரிவான திருப்பணிகள் மேற்கொள்ளப் பட்டு, எதிர் வரும் 11.09.2013ஆம் நாளில் குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடத்த ஏற் பாடாகியுள்ளது. சிறப்புமிகு இவ்விழாவில் கலந்து கொண்டு வீழிநாத கல்யாண சுந்தரரின் அருளால் எல்லா நலமும் எல்லா வளமும் பெற்று வாழ்க!

அச்சிறுபாக்கத்தில் பைரவருடன் கிரிவலம்

புராணச் சிறப்புமிக்கதும், அகத்தியர் நாள்தோறும் வலம் வந்து வழிபட்டதும், சித்தர்கள் வாழ்வதும், சஞ்சீவிமலையாக இருப்பதுமான அச்சிறுபாக்கம் மலை மீது மரகதவல்லி உடனாய பசுபதீசுவரர் எழுந்தருளியுள்ளார். இம்மலையை ஆண்டு தோறும் அச்சிறுபாக்கத்து ஆட்சீசுவரரும், பெரும்பேர்கண்டிகை முருகனும் வலம் வந்து அருள்பாலிக்கின்றனர். இம்மலையில் நெடுங்காலம் நடந்து தடைபட்டிருந்த கிரிவலம் வரும் நிகழ்ச்சி மீண்டும் தொடங்கப்பட்டு கடந்த 20.08.2013 பௌர்ணமி நாளில் அன்பர்கள் மலை வலம் வந்தனர். திரிபுர சுவர்ண பைரவருக்கு நண்பகலில் அமுது படையல் பூசை நடத்தி, வைரவர் திருவுருவத்துடன் மலை வலம் மாலை 4 மணிக்குத் தொடங்கி இரவு 7 மணி அளவில் நிறைவு பெற்றது. கிரிவல நிறைவில் அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெள்ளெருக்கு விநாயகர்

ஆதியில் மரத்தினை வழிபடும் வழக்கமே பெரும்பான்மையாக இருந்தது. மக்கள் மரங்களைத் தெய்வங்களாகவே போற்றி வழிபட்டனர். அவற்றில் தெய்வ சக்தி உறைவதாக நம்பினர். சிவபெருமான் திருப்பெருந் துறையில் குருந்த மரமாகவும், பொதுவுடையார் கோயிலில் ஆல மரமாக வும், குற்றாலத்தில் பலா மரமாகவும் போற்றி வழிபடப்படுவதை இன்றும் காண்கிறோம்.

தெய்வீக மரங்கள் கால வெள்ளத்தால் பட்டுப்போன பின்னும் அவற்றின் மீது உலோகத் தகடுகளைப் பதித்துப் பாதுகாத்து வழிபடும் நிலையும் உள்ளது. மரங்களைப் போற்றி வழிபட்ட மக்கள் தெய்வத் திருவுருவங்களை மரங்களைக் கொண்டு செய்து வழிபட்டனர். பொதுவாகத் தெய்வத் திருவுருவங்களைச் செய்வதற்குப் பாலுள்ள மரங்களே பயன்படுத்தப்பட்டன.

மஞ்சள்கடம்பு, வேங்கை மரங்களைக் கொண்டு முருகன் வடிவங்களைச் செய்து வழிபட்டனர். அத்தி மரங்களை கொண்டு விநாயகர், அம்பிகை, திருமால் முதலான தெய்வ வடிவங்களைச் செய்து வழிபட் டனர். விநாயகப் பெருமானை வெள்ளெருக்கு வேரில் செய்து வழிபடும் நிலை நெடுங்காலமாக உள்ளது. இது தனிச் சிறப்புடன் போற்றப்படுகிறது.

முதிர்ந்த வெள்ளெருக்கு மரத்தைத் தேர்ந்தெடுத்து அதையே விநாயகராகப் பாவித்து, ஒரு மண்டலம் பூசிக்க வேண்டும். பின்னர், அதன் வடக்குப் பக்கம் பூமியை அகழ்ந்து, வடக்குநோக்கி ஓடும் கனமான வேரைத் தேர்ந்தெடுத்து இதற்குக் காப்புக் கட்டி வெட்டி எடுக்க வேண்டும். அதைச் சிற்பியிடம் அளித்து விநாயகரைச் செதுக்க வேண்டும். ஒவ்வொரு படலமாகச் செதுக் கி எடுத்து நிழலில் உலர வைத்துப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எதிர் பக்க அட்டையில் ....

எதிர்ப்பக்கத்தில் இடம் பெற்றுள்ள சிவகாமி உடனாய ஆனந்தநடராசரின் திருவுருவம் இங்கிலாந்து லண்டன் மாநகரில் வெம்பிலி ஆலயத்தில் இடம் பெற்றுள்ள மூர்த்தியாவார். கீழேயுள்ள படம் இலண்டன் ஹைகேட் (High gate)முருகன் கோயிலில் 18 ஆகஸ்ட் 2013, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நால்வர் மற்றும் அருணகிரிநாதர் விக்ரகப் பிரதிஷ்டை விழாவில் எடுக்கப்பட்டது. முதலில் விக்ரகங்கள் மேல் தான்ய வாசமாக நெல் தூவப்பட்டு, பின்னர் பலவித அபிஷேகங்களும் தீபாராதனைகளும் நடைபெற்றன. சிறிய சந்நிதி புதிதாகக் கட்டப்பட்டு. அதனுள் சமயக் குரவர்கள் எழுந்தருளி வைக்கப்பட்டனர். அருணகிரிநாதர் அறுமுகன் சந்நிதியில் வைக்கப்பட்டார். அலங்காரம் பூசைக்குப் பின் மகாப்பிரசாதத்துடன் நிகழ்ச்சி முடிவுற்றது.நால்வர் விக்ரகங்கள் திரு. தியாக மூர்த்தி அவர்களாலும், அருணகிரிநாதர் திரு.பால சுப்ரமணியம் அவர்களாலும் கோயிலுக்கு அர்ப்பணிக்கப்பட்டன. (தகவல்.ச.வேதநாராயணன்)

படிப்படியாக விநாயகரை உருவாக்க வேண்டும். ஒரே நாளில் செதுக்கிவிட்டால், வேர் உலர உலரத் திருவுருவத்தில் வெடிப்பு விட்டுவிடும். எனவே உலர வைத்து உலர வைத்தே சிலையைச் செதுக்க வண்டும். விநாயகர் உருவம் நிறைவு பெற்றதும், அதன்மீது வெண்கடுகை அரைத்துப் பூசி உலர வைக்க வேண்டும்.

பூசைக்கு ஏற்றுக் கொண்டு நிலைப் படுத்தியதும், சாம்பிராணி தைலம் அல்லது புனுகு சாத்தலாம். பொதுவாக வெள் ளெருக்கு விநாயகருக்கு அபிஷேகம் செய்யும் வழக்கமில்லை. மலரிட்டு மந்திரம் ஓதியே வழிபடுகின்றனர்.

வெள்ளெருக்கு விநாயகரை வைத்து வழிபடும் வழிபாட்டால் அப்பூசை பன் மடங்கும் பலன் தரும் என்று கூறுகின்றனர்.

விநாயகருக்குத் தும்பை, நந்தியா வர்த்தம், வெள்ளெருக்கு முதலிய வெண் மலர்களைக் கொண்டு வழிபட்டால் அவ் வழிபாடு பன்மடங்கு பலன் தரும் என்றும் கூறுகின்றனர்.

நடன விநாயகர்

ஆட்டமும் பாட்டமும் உயிர்களுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. அது இயற்கையோடு இயைந்திருக்கிறது. இன்பத்திலும் துன்பத்திலும் ஆட்டமும் பாட்டமும் கலந்தே இருக்கிறது. பக்தர்கள் மகிழ்விக்க தெய்வங்கள் ஆடல்புரிகின்றன. காளியை அடக்கச் சிவபெருமானும் காளிங்கன் என்ற பாம்பை அடக்க கிருஷ்ணரும் ஆடல்புரிந்ததைப் புராணங்கள் கூறுகின்றன. விநாயகப் பெருமானையும் ஆடல் உவந்ததெய்வமாகக் கொண்டாடுகின்றனர். ஆறு கரங்களுடன் ஆனந்தத் தாண்டவராக ஆனைமுகனைப் போற்றி வழிபடுகின்றனர். நடன விநாயகர் நலமருளும் விநாயகராக இருக்கிறார்.

Owned and published by P.S.ATCHILINGAM from 29, Beemanna Mudali Garden Street, Alwarpet, Chennai - 600 018. Printed by V.S.SHANMUGA RAMA SUBRAMANIAN at MASS TYPHOGRAPHIC,11(5A) Poes Road, Teynampet, Chennai- 600018.'
Editor: P.S. ATCHILINGAM

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



(மேலே) லண்டன் விம்பிலி ஆலயத்திலுள்ள சிவகாமி உடனாய ஆனந்த நடராஜப் பெருமான்
(கீழே) லண்டன் ஹைகேட் முருகன் ஆலயத்தில் நால்வர் மற்றும் அருணகிரிநாதர் பிரதிஷ்டை விழாவில்....



அன்பர்கள் அனைவருக்கும் விநாயகபெருமான் அருளால் எல்லா வளமும் நலமும் பெற்று இனிது வாழ்க! வளர்க!!

சைவசித்தாந்த இரத்தினம்
Dr. V. ஆறுமுகம், (CLRI, Retd.)

திருப்பணிச் செம்மல், அருட்பணி அரசு
M.V. ஜெய்சங்கர் B.E., (Struc.)
ப.எண்.12, கிருஷ்ணையர் தெரு
எல்விஜெ பில்டர்ஸ், நுங்கம்பாக்கம்,
சிவசுந்தரி அறக்கட்டளை,

சைவசித்தாந்த இரத்தினம்
R. இராமச்சந்திரன்
நூம்பல், சென்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

SivaSunthari - Tamil Monthly
Postal Registration No. TN/CH/(C)/150/11-13
Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2008/25724
Published on 03.09.2013

பீமரதசாந்தி நல்வாழ்த்துக்கள்

ஸ்வஸ்திஸ்ரீ விஜயவருடம் ஆவணிமாதம் 3ஆம் நாள் (19.08.2013) திங்கட்கிழமை
உத்திராட விண்மின் நன்நாளில் திருக்கடையூர் அபிராமி உடனாய அமிர்த கடேசுவர சுவாமி
ஆலயத்தில் அரசு தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியரும் (பணி நிறைவு)
ஆன்மிக செல்வருமான ஆன்மிக ரத்னா, சைவ தமிழ் புலவர்
சித்தாந்த ரத்தினம்

எலப்பாக்கம் சிவத்திரு. மா. மணிவாசகம் அவர்களின்

பீமரத சாந்தி விழா இனிதே நடைபெற்றது. இந்த இனிய வேளையில்
அவரது துணைவியார்

சௌபாக்கியவதி ராமஜெயம் அம்மாள் அவர்களும்

மற்றும் அவர் குடும்பத்தினரும் சிவகாமசுந்தரி உடனாய ஆனந்தநடராஜன் அருளால்
சகல செல்வ யோக மிக்கப் பெருவாழ்வு பெற்று இனிது வாழ
வாழ்த்தி மகிழ்கிறோம்.

இவண்
அன்பர்களும் நண்பர்களும்